★ விலை ரூபா 1-00
பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

ஈழநாடு
THE EELANADU

(1958 — வெள்ளிவிழா ஆண்டு — 1983)

மலர் 25 தை 20 ரபி. ஆகி 18 இதழ் 355

யாழ்ப்பாணம் புதன்கிழமை 2—2—83

நீர்வேலி கொள்ளை, கொலை வழக்கு:

# பத்திரிகை செய்திகள்பற்றி சட்டத்தரணிகள் சர்ச்சை

[கொழும்பு]

நீர்வேலி கொள்ளை – கொலை வழக்கின் 'வொயர்டயர்' விசாரணை நேற்று கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நடைபெற்றபொழுது, பத்திரிகைகளில் இந்த வழக்குப் பற்றிய செய்திகள் வெளிவருவதுபற்றி பிரதி சொலிசிட்டர் ஜெனரல் திரு சுனில் டி சில்வாவுக்கும் எதிரிகளின் சிரேஷ்ட சட்டத்தரணி சத்தியேந்திராவுக்குமிடையில் வாக்குவாதம் ஏற்பட்டது.

ஏற்கனவே சாட்சியமளித்துள்ள மேஜர் அப்துல்ஸஹீரை பிரதி சொலிசிட்டர் ஜெனரல் திரு சுனில் டி சில்வா மறுவிசாரணை செய்தபோது 6வது எதிரியின் காலிலிருந்த காயம் மோட்டார் சைக்கிளிலிருந்து விழுந்தபோது ஏற்பட்டிருக்கலாம் அல்லவா என்று கேட்டார்.

இதை எதிரிகளின் சட்டத்தரணி சத்தியேந்திரா கடுமையாக ஆட்சேபித்தார். அக்கட்டத்தில் எதிரிகளின் சட்டத்தரணி பத்திரிகைகளில் செய்தி வரவேண்டுமென்பதற்காகவே அடிக்கடி ஆட்சேபம் கிளப்பிவருகிறார் என்று குறிப்பிட்டார்.

இக்கருத்தை வன்மையாக ஆட்சேபித்த திரு சத்தியேந்திரா பின்வருமாறு தெரிவித்தார்:-

'பத்திரிகைகளில் என்ன

8ம் பக்கம் பார்க்க)

★ தாய்நாட்டிலிருந்து வெளி நாடுகளுக்கு

# தப்பி ஓடும் குற்றவாளிகளை

# திருப்பி ஒப்படைக்க சட்டம்!

## காமன்வெல்த் மாநாட்டுக்கு பிரேரணை வருகிறது

### கொழும்பில் 14-ல் ஆரம்பம்; 51 நாடுகள் பங்குபற்றும்

(கொழும்பு)

ஒரு நாட்டிலிருந்து பிற நாட்டிற்கு தப்பிச் செல்லும் குற்றவாளிகளை மீண்டும் அதே தாய் நாட்டிற்குக் கொண்டுவர வழிவகை செய்யும் சட்டத் திருத்த விதியொன்று, கொழும்பில் நடைபெறவிருக்கும் காமன் வெல்த் நாடுகளைச் சேர்ந்த சட்டத் துறை அமைச்சர்கள் மாநாட்டில் சமர்ப்பிக்கப்படவிருக்கிறது.

பண்டாரநாயக்கா சர்வதேச ஞாபகார்த்த மண்டபத்தில் இம்மாதம் 14ம் திகதி ஆரம்பமாகும் காமன் வெல்த் சட்ட அமைச்சர்கள் மகாநாட்டை ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன ஆரம்பித்து வைப்பார்.

இம்மகாநாடு 18ம் திகதி வரை நடைபெறும்.

இச்சட்டத் திருத்த விதியைக் கொண்டுவருவதற்குப் பலநாடுகள் வலியுறுத்தியுள்ள அதேநேரத்தில் இலங்கை இவ்விஷயத்தில் கூடுதல் அக்கறை காட்டியுள்ளதாகத் தெரியவருகிறது.

காமன்வெல்த் நாடுகள் பலவற்றில், குற்றச்செயல்கள் புரிந்த பலர் வேறு நாடுகளுக்குத் தப்பிச்சென்றுவிடுவதால் குற்றவாளிகள் உரிய தண்டனை பெறுவதிலிருந்து தப்பிக்கொள்கின்றனர்கள் என்றும் இச்சட்ட அமைச்சர் மாநாட்டில், நிறைவேற்றப்படவிருக்கும் இச்சட்டவிதி அமுல்செய்யப்படும் பட்சத்தில் இலங்கையிலிருந்து வெளிநாடுகளுக்குத் தப்பிச் சென்றுள்ள பல குற்ற

(8-ம் பக்கம் பார்க்க)

## பத்து இளைஞர்களும் விடுதலை

(புலோலி நிருபர் எஸ். திருச்செல்வம்)

பருத்தித்துறைப் பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு பொலிசாரினால் சந்தேகத்தின்மீது கைது செய்யப்பட்டு றிமாண்டில் வைக்கப்பட்ட வல்வெட்டித்துறையைச் சேர்ந்த பத்து இளைஞர்களும் நேற்று விடுதலைசெய்யப்பட்டனர்.

'இவர்களும் சமூக விரோதிகளே' என்ற தலைப்பிலான துண்டுப்பிரசுர விநியோகத்துடன் தொடர்பிருக்கலாம்

(8-ம் பக்கம் பார்க்க)

## பல்கலைக்கழக மாணவரின் உண்ணாவிரதப் போராட்டம்

### கொட்டும் பனியிலும் பிரார்த்தனை!



(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக மாணவர்களின் உண்ணாவிரதப் போராட்டம் நேற்றுக் காலை 8 மணிக்கு மௌன பிரார்த்தனையுடன் யாழ். பல்கலைக்கழக வளவுக்குள் ஆரம்பமானது.

தடுத்து வைக்கப்பட்டிருக்கும் பல்கலைக்கழக மாணவர்களான ராஜாஜி, ஜெயப்பிரகாஷ், மற்றும் கல்லூரி மாணவர்களான ரவீந்திரராசா, மயில்வாகனம், மத குருமார், விரிவுரையாளர், அவரது மனைவி, வைத்தியர்கள் ஆகியோரை உடனடியாக விடுதலை செய்யவேண்டும் அல்லது சாதாரண சட்டத்தின்கீழ் நீதிமன்ற விசாரணைக்கு உட்படுத்தவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தே இந்த உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்துகின்றனர்.

நேற்றுக் காலை உண்ணாவிரதத்தை ஆரம்பிப்பதற்கு முன்னர் பல்கலைக்கழக இராமநாதன் மண்டபத்தில், பல்கலைக்கழக மாணவர் அவைத் தலைவர் திரு. ஸ்ரீஸ்கந்தராசா தலைமையில் கூடி ஆலோசனை நடத்தினர்.

[8-ம் பக்கம் பார்க்க]

முதன்முறையாக - யாழ் நகரில் !!
**Diploma in Hotel Managment & Tourism**
3 மாதத் தீவிரப் பயிற்சி

வெளிநாடுகளிலும் உள்நாட்டிலும்
உடனடி வேலை வாய்ப்புக்கள்

பாடநெறி
—> ஹோட்டல் முகாமைத்துவம்
—> உல்லாசப் பிரயாணத்தொழில்முறை
—> Spoken German, French & English

முதன்மைவாய்ந்த ஹோட்டல்களில்
செய்முறைப் பயிற்சி (Practical) அளிக்கப்படும்
தகுதி:- க. பொ. த. சாதாரண சித்தி
[ஆண், பெண் ஆகிய இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்]
கட்டணம்:- முழுப் பயிற்சி நெறிக்கும் ரூபா 950-00
[3 தவணைகளில் செலுத்தலாம்]

ஆரம்பம்: 16-2-83

அஸ்ரன் இன்ஸ்ரிரியூட்
166/1, ஆஸ்பத்திரி வீதி - யாழ்ப்பாணம்
6049

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

குமரகோட்டம், கோண்டாவிலிலுள்ள 3 பரப்பு காணி விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: இ. தங்கவேலு, குமரகோட்டம், கோண்டாவில். 6032

ஊரெழு பிள்ளையார் கோவிலுக்கு அண்மையில் வீடு கட்டக்கூடிய 4 1/2 பரப்புக்காணி உடன் விற்பனைக்குண்டு. தொடர்புகொள்ளவும்: பொ. நவரத்தினராஜா, 18, 1-ம் குறுக்குத் தெரு, ஊரெழு கிழக்கு, சுன்னாகம். (6003)

இரண்டு ஒட்டுப்பலகைக் கதவுகள் 2' 9'', 2' 3'' கழிவு உண்டு. தொடர்பு: 96, தபாற் கந்தோர் வீதி, திருநெல்வேலி தெற்கு, யாழ்ப்பாணம். தொலைபேசி: 424. (6047)

## தேவை

தனியார் கல்வி நிலையத்திற்கு பாவித்த மேசை, வாங்குகள் தேவை. விண்ணப்பிக்கவும்: 30, சுவாட்ஸ் ஒழுங்கை, சுண்டிக்குளி. (6062)

தமிழ் தட்டெழுத்து/எழுதுவினைஞர் உடன் தேவை. திறமையும், அனுபவமும், ஆங்கில அறிவும் உடையவர் விரும்பத்தக்கது. ஆங்கில தட்டெழுத்துப் பயிற்சியும் பெற்றவருக்கு முன்னுரிமை வழங்கப்படும். இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். இம்மாதம் 4, 5, 6ம் திகதிகளில் நேரில் தொடர்பு கொள்ளவும்-இல: 257, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். (6060)

நல்ல நிலையிலுள்ள பாவித்த தையல் மெசின் [கைமெஷினாகவும் இருக்கலாம்] தேவை. விபரங்களுடன் தொடர்பு கொள்ளவும். வே. வேலாயுதம்பிள்ளை, வலட்டி வீதி, கரவெட்டி மேற்கு, கரவெட்டி. [6052]

தனியார் துறையில் கணக்குப் பதிவில் அனுபவமுள்ள ஓர் கணக்குப் பதிவாளர்/எழுதுவினைஞர் உடனடியாகத் தேவை. முழு விபரங்களுடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 6045, C/O ஈழநாடு, யாழ்ப்பாணம். 6045

## வகுப்புகள்

வெல்டிங் - மோட்டார் மெக்கானிசம் - வயறிங் [அதிக செய்முறை அறிமுறையுடன்] ஆரம்பம்: 4-2-83. 9-00am. The Jaffna Engineering College, J E C, 33, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். [புகையிரதக் கடவைக்கருகில்] 6054

Scientific Cutting, Hair Styles, Cake Making and Icing, Short Eats, Flower Making ஆகியவற்றிற்கு வகுப்புக்கள் நடைபெறுகின்றன. சேர விரும்புவோர் சனி, ஞாயிறு நாட்களில் தொடர்பு கொள்ளவும். இல. 27, 3ம் ஒழுங்கை (எஸ். பி. சாமி அன் கோ அருகாமையில்) மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். 6025

## பயிற்சி

றேடியோ - டெலிவிஷன். ஏயர் கொண்டிசனிங், எலக்றிக்கல் வயறிங், எலக்றிக்கல் றீவைண்டிங், மோட்டமெக்கானிசம், வெல்டிங் பயிற்சிகள் ஆரம்பம் 09-02-83 விபரம் நேரில் (The School of Computer Studies) 52/1, கனகரத்தினம் [கட்டிடம் (வீனஸ் மேல்மாடி) ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 6035

## FOR SALE

Kaithady Nunavil Chavakachcheri: 24 Larchams close to Kandy Road on Amman Kovil Road frontage Dr S. Gnanasambandar, Sivan Clinic, Station Road, Chavakachcheri. (6044)

## WANTED

Wanted Computer Instructor for a Reputed Academy in Jaffna. Apply Before 3-rd Instant. Advt. No: 6039, C/O Eelanadu, Jaffna. 6039

## ஆசிரியர் தேவை

க. பொ. த. உயர்தர வகுப்புகளில் கற்பிக்க விஞ்ஞானப் பட்டதாரி ஆசிரியர் தேவை.

பாடங்கள்:

தூயகணிதம்,
பிரயோக கணிதம்,
பௌதிகவியல்.

பின்வரும் விலாசத்திற்கு விண்ணப்பிக்கவும்.

அதிபர்
திருக்குடும்பக்கன்னியர் மடம்,
ஆங்கில பாடசாலை,
யாழ்ப்பாணம்.
[6056]

## அறிவித்தல்

சாவகச்சேரி, சங்கத்தானை, மீனாட்சியம்மன் கோவில் வீதி, ''கோற்சாட்டி வளவு', நில. பர. 5ம் வீடும் என்னுடைய சொத்தும் ஆட்சியுமானதென்று யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 220ம் இலக்கத்தில் வசிக்கும் சின்னத்தம்பி நவரத்தினம் ஆகிய நான் இத்தால் வெளியரங்கப்படுத்துகிறேன். இவ்வாதனத்தையிட்டு வேறு ஒருவருக்கும் உரித்தோ உரிமையோ இல்லையென்று மேலும்வெளியரங்கப்படுத்துகிறேன்.

S. நவரெத்தினம்
[6061]

## இன்றைய பலன்

தை மாதம் 20-ந் திகதி
புதன்கிழமை
(2—2—83)

மேடம்: தாமதக்குணத்தின் மூலம் தவறுகள் நடக்கும். வேண்டாத விவாதங்களால் வீண் பெயர் கேட்க நேரிடும். கலகச் செய்திக்கும் இடமுண்டு. நிதியில் நெருக்கடி தோன்றும்.

இடபம்: கட்டி வெல்லம் போல் இனிக்கும் வாழ்க்கை. காதலர் எண்ணங்கள் கைகூடும் இனபந்துக்களின் வரவில் மகிழ்ச்சி உண்டு. பெரியோர் முன்னேற்றமுண்டு.

மிதுனம்: தொழில்துறையில் நல்ல மாற்றம் ஏற்படும். மேலதிகாரிகளின் முன்னேற்றம் தப்பாமல் கிடைக்கும். விவசாயிகளாயின் அபிவிருத்தி காணப்படும்.

கடகம்: இதயம் இன்பத்தால் மலரும். இல்லத்தில் இனிமை தவழும், உறவினர் மத்தியில் செல்வாக்குப் பெருகும். ஒரு பெண்ணின் மூலம் அதிக ஆதரவு கிடைக்கும்.

சிங்கம்: எதிலும் ஏமாற்றம் தென்படும். அரச பயத்திற்கும் இடமுண்டு, எதிலும் அடக்கமும் நிதானமும் வேண்டும். எதிர்பாராத வகையில் பொருள் விரயமாகும்.

கன்னி; தனதானிய நஷ்டத்துடன் பூமிப்பிணக்கு தோன்றக்கூடும், வேண்டிய ஒருவரைப் பகைத்துக்கொள்ள நேரிடும். கடமை ஆற்றுமிடத்தில் உற்சாகம் வேண்டும்.

துலாம்: வேண்டிய அளவுக்கு இன்று வெள்ளிப் பணம் துள்ளும். புதிய நண்பர்களை தேடிக்கொள்வீர்கள், சகல தொழில் துறையிலும் முற்படுவீர்கள் சிறப்பான நாள்.

விருட்சிகம்: சூழ்ச்சிவலையினும், அடுத்துக்கெடுப்பவர்கள் அருகிலேயே இருப்பார்கள். பெண் ஒன்றின் அனுதாபம் உங்களுக்கு மனக் கவலையைத் தரலாம்.

தனு: நீண்ட பிரயாணமொன்று மேற்கொள்ளப்படலாம். தாய் வழி மூலம் பொருள் வரவுக்கு இடமுண்டு, வாகனம் கொள் முதல் செய்வோர்க்கு சிறப்பான நாள்.

மகரம்: தொழில் வேட்டையில் வெற்றி கிடைக்கலாம், அரசாங்க ஊழியராயின் பதவி உயர்வுக்கு நடவடிக்கை எடுக்கப்படும், வீட்டில் அமைதி உண்டு.

கும்பம்: திடீர் தாக்குதலால் உங்களைத் திகைக்க வைக்கலாம், நினைப்பது ஒன்று நடப்பது வேறொன்றாக இருக்கும். வெளியூர்ப் பயணம் சிலருக்கு வேதனையைத் தரலாம்.

மீனம்: தாம்பத்திய வாழ்க்கையில் தனிச் சிறப்புக்காணப்படும். பெரியவர்களின் உதவி உங்களுக்குத்தப்பாமல் கிடைக்கும்.

சோதிடக் கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை.

## தகவம் அலுவலர்கள்

(கொழும்பு)

தமிழ்க் கதைஞர் வட்டத்தின் (தகவம்) பொதுச் சபைக் கூட்டம் திரு. வ. இராசையா தலைமையில் கொழும்பு விவேகானந்த சபை சிறிய மண்டபத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் ஐந்தாம் ஈராண்டிற்கான (1983, 1984) அலுவலர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்

தலைவர் வ. இராசையா, தற்காலிக பொதுச் செயலர், நூலகச் செயலர் மாத்தளை கார்த்திகேசு இணைப் பொருளர்கள் க. குமாரசாமி, மா. குலமணி நாவல் இலக்கியச் செயலர் நா. சுப்பிரமணியம் கணக்காய்வர் செ. பழநிச்சாமி விழாச் செயலர் மா. பாலசிங்கம்.


சகல விதமான மணிக்கூடுகளையும்
உத்தரவாதத்துடன் திருத்திக்கொள்ளவும்
புதிய மணிக்கூடுகளை வாங்கிக்கொள்ளவும்

டில்கா வாச் வேக்ஸ்
Dilka Watch Works
(Opposite Bus-stand)
பஸ்நிலைய எதிர் மேல்மாடி)
யாழ்ப்பாணம்.
போன்: 24174

ஆதரவாளர் அனைவருக்கும்
எமது புத்தாண்டு நற்செய்தி
உங்கள் மங்கள வைபவங்களை சிறந்த முறையில்
வீடியோ படம் பிடித்து எடிட்டிங் ஓடியோ
றெக்கோடிங் செய்வதற்கும்
உங்கள் மனங்கவர்ந்த ஒலி அமைப்பாளர்
புலவர் சவுண்ஸ் வீடியோ படப்பிடிப்பாளர்
K. P. புலவர்.
கோண்டாவில் வடக்கு, கோண்டாவில்.
(6064)


## அகில இலங்கை விஸ்வகர்மகுல சங்கம்

### தை அமாவாசைத் திருவிழா

மேற்படி சங்கத்தார் வருடாவருடம் திருக்கேதீஸ்வரத்தில் நடாத்தி வரும் மேற்கூறிய திருவிழா இவ்வருடம் 12-2-83 சனிக்கிழமை அதிகாலை தொடக்கம் நடைபெற்று நண்பகல் மகேசுரபூசையும் நடைபெறவுள்ளது.

மேற்படி விழாவில் பங்குபற்ற விரும்புவோர்; சங்கப்பொருளாளர்

திரு. க. ச. கந்தையா,
தங்கமாளிகை,
உரும்பிராய்.

என்ற விலாசத்தில் 7-2-83க்கு முன் தொடர்பு கொள்ளவும். (6059)

## வெற்றிடங்கள்

மூன்று வருடத்திற்கு மேற்பட்ட அனுபவமுள்ள
வேக்ஸ்சொப் பி (F) பிற்றர், ரிங்கர், வெல்டர், ரேணர்
(WORK SHOP-FITTER, TINKER, WELDER and TURNER)
உடனடியாகத் தேவை.
நற்சாட்சிப்பத்திரங்களுடன் நேரில் வரவும்.

சேவி கிளாஸ் அன்ட் மெட்டல் வேக்ஸ்,
நீர்வேலி.
(6005)

## பதவி வெற்றிடங்கள்

### கணக்கு லிகிதர்

யாழ். மாவட்டத்தில் குறைந்தது இரண்டு வருடங்கள் வசிக்கும் இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரிகள் 9-2-83ல் 20 வயதுக்கும் 35 வயதுக்குமிடைப்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.

வேதனம் ரூபா 195/- ரூபா 345/-
10×10 12/50×4

இத்துடன் கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட படிகள்

தகைமைகள்: க. பொ. த சாதாரண தரத்தில் எண்கணிதம்/வர்த்தக கணிதம்/கணிதம், தமிழ் ஆகிய பாடங்களுட்பட ஐந்து திறமைச்சித்திகளுடன் ஆறு பாடங்களில் பெற்ற சித்தி. கணக்கியலில் திறமைச்சித்தி அல்லது கணக்கியலில் தராதரமுடையவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

விண்ணப்ப முடிவு திகதி: 9-2-83
நண்பகல் 12-00 மணி

பொது முகாமையாளர்,
யாழ். மாவட்ட புடைவை நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்,
10/1, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
(6063)

# ஏவுகணை தளங்களை தடை செய்யும் ஒப்பந்தம்: கைச்சாத்திட ரீகன் இணக்கம்!

## அமெரிக்க உபஜனாதிபதி தகவல்

வாஷிங்டன், பெப். 1

நடுத்தர ரக ஏவுகணைத் தளங்களை தடைசெய்வதற்கான ஒப்பந்தத்தில் சோவியத் யூனியனுடன் கைச்சாத்திட அமெரிக்க ஜனாதிபதி திரு. றொனால்ட் ரீகன் இணக்கம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான கடிதத்தை அமெரிக்க உபஜனாதிபதி திரு. ஜோர்ஜ்புஷ் மேற்கு ஜெர்மன் சென்றிருந்தபோது, அங்கு அவருக்கு அதிபர் ஹெல்மட் ஹோலினால் அளிக்கப்பட்ட விருந்துபசாரத்தின் போது வெளியிட்டார்.

இத்தகைய உடன்பாட்டில் எந்தத்தருணத்திலும், எந்த இடத்திலும் கைச்சாத்திடத் தயாரென்றும் அக்கடிதத்தில் ஜனாதிபதி ரீகன் தெரிவித்துள்ளார்.

ஐரோப்பிய மக்களின் நன்மை கருதியே இவ்வுடன்பாட்டைச் செய்யவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ரீகனின் இந்நடவடிக்கை மேற்கு ஜெர்மனியில் நடைபெறவுள்ள பொதுத்தேர்தலில் அதிபர் ஹெல்மட் ஹோலுக்கு உறுதுணையாக அமையுமென்று அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர். (வெ)

## கூட்டுச்சேரா இயக்க நிக்கரகுவா மாநாடு

மனாகுவா, பெப். 1

கூட்டுச்சேரா நாடுகளது ஒருங்கிணைப்புக் கமிட்டியின் விசேஷ கூட்டம் நிக்காரகுவாவின் தலைநகரான இங்கு நடைபெற்றது. உலகின் பல பகுதிகளையும் சேர்ந்த இக்கூட்டத்தில் 85 நாடுகளைச் சேர்ந்த அமைச்சரவை மட்டத்திலான 116 குழுக்கள் கலந்துகொண்டன சர்வதேச நிறுவனங்கள், தேசிய விமோசன இயக்கங்களின் பிரதிநிதிகளும் இதில் அடங்குகின்றனர்.

இன்றைய சர்வதேச நிலைமையில் மிக அவசர அவசியமானவை என்று கூட்டுச்சேரா இயக்கம் கருதும் பிரதான பிரச்னைகளும் வளர்முக நாடுகள் எதிர்கொண்டுள்ள பிரச்னைகளும் இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டன.

காலனியாதிக்கம், நவகாலனியாதிக்கம், மேலாதிக்கம்,

(7-ம் பக்கம் பார்க்க)

## தேசிய ஒருமைப்பாட்டை வளர்க்க இந்தியாவில் புதிய நாணயங்கள்!

சென்னை, பெப். 1

தேசிய ஒருமைப்பாட்டை வளர்க்கும் வகையில் இந்தியமத்திய அரசு புதிய நான்கு நாணயங்களை வெளியிட்டுள்ளது. இந்த நாணயங்களின் பெறுமதி 100 ரூபா, 10 ரூபா, 2 ரூபா, 50 சதமாகும்.

நிதியமைச்சர் திரு. பிரணப் முகர்ஜி நேற்று இவற்றை வெளியிட்டார்.

இப்புதிய நாணயங்களின் ஒருபக்கத்தில் 'அசோக்' ஸ்தூபியும், மறுபக்கத்தில் இந்திய தேசப்படமும் பொறிக்கப்பட்டுள்ளது. இத்தேசப்படத்தின் கீழே தேசிய மொழியான ஹிந்தியிலும், ஆங்கிலத்திலும் 'தேசிய ஒருமைப்பாடு' என எழுதப்பட்டுள்ளது.

இந்த நான்கு புதிய நாணயங்களில் 2 ரூபா பெறுமதியானதும், 50 சதம் பெறுமதியானதுமே ஆரம்பத்தில் புழக்கத்தில் விடப்படுமென்று தெரிவிக்கப்பட்டது. (கி)

## 'எவ் 16'ரக போர் விமானங்கள்

இஸ்லாமாபாத், பெப். 1

நவீன 'றேடார்' சாதனம் பொருத்தப்பட்ட 'எவ் 16'ரக போர் விமானங்கள் அமெரிக்காவிடமிருந்து விரைவில் பாகிஸ்தானுக்கு கிடைக்குமென்று ஜனாதிபதி ஷியாவுல் ஹக் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக பாகிஸ்தானுக்கும் அமெரிக்காவுக்குமிடையே கருத்துவேறுபாடில்லையென்றும், இப்பிரச்னை சுமுகமாகத் தீர்க்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். [வெ]

## பெரியார் ஈ. வெ. ரா. நினைவு ஸ்தூபி

சென்னை, பெப். 1

பெரும் பகுத்தறிவாளரும் திராவிடக்கழக ஸ்தாபகருமான அமரர் திரு ஈ. வே. ராமசாமிப் பெரியாரின் நினைவு ஸ்தூபி ஒன்று வட ஆற்காடு மாவட்டத்தின் வேலூரில் நேற்று திறந்து வைக்கப்பட்டது.

பெரியாரின் நூற்றாண்டு விழா சின்னமாகவே இந்த ஸ்தூபி நிர்மாணிக்கப்பட்டது. "தமிழக மக்களின் அறியாமைக்கு முடிவுகட்டும் வகையில் பெரியார் ஈ. வெ. ரா. தீர்க்க தரிசனத்துடன் செயல்பட்டார்" என்று தமிழக கல்வி அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் இவ்விழாவில் குறிப்பிட்டார்.

இந்த நூற்றாண்டு விழாவில் பெரியார் ஈ. வெ. ரா. வின் பகுத்தறிவுப் போதனைகளை விளக்கும் 95 அடி உயரமான கல்ஸ்தூபி ஒன்று சென்னை நகரில் அமையவிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இத்தகைய தூண்கள் நாளடைவில் தமிழகத்தின் சகல பாகங்களிலும் தோன்றவேண்டுமென்றும் இவ்விழாவில் விருப்பம் தெரிவிக்கப்பட்டது. (கி)

## உலகில் எண்ணெய்விலை இவ்வாரம் குறையுமா?

ஜெனிவா, பெப். 1

உலகில் இவ்வாரம் எண்ணெய் விலை குறைக்கப்படுமென்று எண்ணெய் நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

உலகின் கைத்தொழில் நாடுகளுக்கு வரப்பிரசாதமாக இது அமையுமென்றும் அவர்கள் தெரிவித்தனர்.

ஜெனிவாவில் கூடிய 'ஒபெக்' நாடுகளின் அமைச்சர்கள் எண்ணெய் விலையைக் குறைக்கவேண்டுமென்று தீர்மானித்துள்ளனர்.

ஒரு பீப்பா எண்ணெய்யை 34 டாலர்களாக விற்பனை செய்வதென்று இவை தீர்மானித்துள்ளன. வளைகுடா நாடுகள் எண்ணெய் விலையை ஒரு பீப்பாவிற்கு 30 டாலர்களாக நிர்ணயிக்க வேண்டுமென்று சவூதி அரேபியா கேட்டுள்ளது. (வெ)

## தென் காந்தத்துருவம் எங்கே இருக்கிறது?

மாஸ்கோ, பெப். 2

தென் காந்தத் துருவம் இருக்கிறது என்பதைத் தீர்மானிப்பதற்காக, 'அட்மிரல் விளாதிமிர்ஸ்கி' 'பத்தாய் பெலின்காஜென்' என்னும் இரண்டு ஆராய்ச்சிக் கப்பல்களில், சோவியத் நாட்டின் புதிய அண்டார்க்டிக் ஆய்வுக் குழுவினர், உலகச் சுற்றுப் பயணம் செய்கின்றனர்.

தென்காந்தத் துருவமானது ஓராண்டுக்குப் பல கிலோ மீட்டர் வேகத்தில் தள்ளிச் சென்றுகொண்டே இருக்கிறது இப்போது அது கடலில் இருப்பதாகக் கருதப்படுகிறது.

சோவியத் ஆய்வாளர்கள் கடலின் அடிப்பகுதியின் பல்வேறு ஆழங்களில் ஆராய்ச்சி நடத்துகின்றனர். நீரோட்டங்கள், பனிப் பிரதேசங்கள் பனிப்பாறைகள் ஆகியவற்றில் ஆராய்ச்சிகளைமேற்கொள்வர். அண்டார்க்டிக்கடலில்பயணம் செல்லும் மாலுமிகள், மீனவர்கள், துருவ ஆராய்ச்சியாளர்களுக்கு உதவும் வகையில் அவர்கள் பணியாற்றுவர்.

1820ஆம் ஆண்டில் வாஸ்தாக், மிர்னி என்னும் ரஷ்யக் கப்பல்களில் பயணம் செய்தவர்கள், அண்டார்க்டிக் கண்டத்தைக் கண்டுபிடித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## திருச்செந்தூர் இடைத்தேர்தல்: அ.தி.மு.க. வேட்பாளரை எம்.ஜி.ஆர். தெரிவார்!

சென்னை, பெப். 1

திருச்செந்தூர் தொகுதி இடைத்தேர்தலுக்கான அ. தி. மு க. வேட்பாளரை தேர்ந்தெடுப்பதற்கான அதிகாரத்தை அக்கட்சியின் [ஆட்சி மன்றக்குழு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி. ராமச்சந்திரனுக்கு வழங்கியுள்ளது.

அ. தி. மு. க. வேட்பாளர் பற்றிய முடிவு ஓரிரு தினங்களில் அறிவிக்கப்படுமென்று கட்சியின் பொதுச் செயலாளர் திரு. ப. உ. சண்முகம் தெரிவித்தார்.

இத்தொகுதிக்கான இடைத்தேர்தல் இம்மாதம் 27ம் திகதி நடைபெறவிருப்பது தெரிந்ததே. (வெ)

## வீழ்ச்சி

(சரவணை)

வெங்காய விலை வீழ்ச்சியடைந்தமையால் வெங்காயச் செய்கையில் ஈடுபட்ட சரவணை, நாரந்தனை, கரம்பன் கமக்காரர்கள் பெரும் ஏமாற்றமடைந்துள்ளனர். பெரும் நட்டத்தையும் அடைந்துள்ளனர்.

## மகாராஷ்டிர முதலமைச்சராக வசந்தாதாபட்டேல் தெரிவு


புதுடில்லி, பெப். 1

மகாராஷ்டிர மாநில சட்டமன்றத் தலைவராகவும், முதலமைச்சராகவும் திரு. வசந்தாதா பட்டேல் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

இவர் முதலமைச்சராக நாளை பதவிப் பிரமாணம் செய்து கொள்வார். 1960ம் ஆண்டு மகாராஷ்டிர மாநிலம் அமைக்கப்பட்ட பின்னர் ஒன்பதாவது முதலமைச்சராக திரு. பட்டேல் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

இவர் மூன்றாவது தடவையாக மாநில முதலமைச்சராக பதவியேற்கவுள்ளாரென்பது குறிப்பிடத்தக்கது.

லோகசபா உறுப்பினரான இவர் அண்மையில் அகில இந்திய இந்திரா காங்கிரஸ் கமிட்டியின் பொதுச் செயலாளர் பதவியிலிருந்து ராஜினாமாச் செய்தது தெரிந்ததே. (வெ)



அல்பிரட் லியோ தம்பிஐயா

அமரர் திரு. ஏ. எல். தம்பிஐயா அவர்களின் அஸ்தி பெப்ரவரி 2-ந் திகதி ஊர்காவற்றுறை, கரம்பனுக்கு எடுத்துச் செல்லப்பட்டு பெப்ரவரி 3-ந் திகதி ஊர்காவற்றுறை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப் படும்.

காலை 8-00 மணிக்கு சென். செபஸ்தியன் தேவாலயத்தில் ஞாபகார்த்த ஆராதனை நடைபெறும்.

(6018)

### மணிவாக்கு

"கீழே இருப்பவனுக்கு வீழ்ச்சியைப் பற்றிய அச்சம் தேவையில்லை, பணிவுள்ளவனுக்கு இறுமாப்புமில்லை"

—ஜோன்பன்யன்.

# நமது நோக்கு

## அந்தோ விலைவாசியே!

மக்கள் அன்றாடம் தமது அத்தியாவசியத் தேவைகளுக்காகப் பயன்படுத்தும் நுகர்வுப் பொருட்களின் விலைகள் நிமிடத்துக்கு நிமிடம் 'ரொக்கட்' வேகத்தில் உயரே எம்பிப்பறந்து கொண்டிருக்கின்றன.

"விலையேற்றத்தைத் தான் அரசினால் கட்டுப்படுத்தமுடியாவிட்டாலும், அதன் வேகத்தையாகிலும் கட்டுப்படுத்த முடியாதா என்று விஷயமறிந்தவர்கள் குரல் எழுப்புகிறார்கள்.

விலையேற்றத்தைநாங்கள் ஏற்படுத்தவில்லை. உலகநுகர்வுப்பொருள் சந்தையில் ஏற்பட்டுள்ள பணவீக்கமே இதற்குக் காரணம்" என்று ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன அவர்கள் நேற்று முன்தினம் திருகோணமலைக்கு விஜயம் செய்தபோது அங்கு கூறியுள்ளார்.

இந்த அரசாங்கம் பதவிக்கு வந்த காலத்திலிருந்தே இப்படித்தான் சொல்லப்பட்டு வருகின்றது. முந்திய அரசும் இதில் பின்னிற்கவில்லை.

உலகச்சந்தையில் விலைகள் ஏறுவதும் இறங்குவதும்-அது உள்ளூர்ச் சந்தையை வெகுவாகப்பாதிப்பதும் சகஜமான விஷயம் தான். ஆனாலும் அரசாங்கத்தின் "தாராள" கொள்கை இந்த விலையேற்றத்துக்கு எந்த அளவுக்கு உதவி புரிந்துள்ளது என்பதை எவரும் ஆராய்ந்து பார்க்க முன்வராதது கவலைக்குரியது.

இந்த விடயத்தில் பெரிய பொருளாதார ஆய்வு ஒன்றை இங்கு நடத்த நாம் முயற்சி செய்யவில்லை. ஒன்றை மட்டும் சுட்டிக் காட்டுவது பொருத்தமாக இருக்கும்.

வெளிநாட்டுப் பொருட்களைத் தாராளமாக எவரும் இறக்குமதிசெய்யலாம் என்ற நிலைப்பாட்டைப் பயன்படுத்திக் கொண்ட தனியார் துறையினர் பலர் மோசடிகளிலும், பதுக்கல் மூலம் தட்டுப்பாடுகளை உருவாக்கி கொள்ளை லாபம் அடிப்பதிலும்இறங்கிவிட்ட உண்மை அவ்வப்போது வெளிவந்து கொண்டிருக்கின்றது.

உள்ளூரில் உற்பத்தியாகும் பொருளை ஏற்றுமதி செய்துவிட்டு வெளிநாட்டிலிருந்து அதே பொருளை இறக்குமதி செய்வதென்பது விலையேற்றத்துக்கும் பொருள் தட்டுப்பாட்டுக்கும் வழிவகுக்காதா, என்ன?

தாராள இறக்குமதிக் கொள்கை துஷ்பிரயோகம் செய்யப் படுவதையாகுதல் அரசும் அதிகாரிகளும்விழிப்புடனிருந்து கட்டுப்படுத்த வேண்டும்.

அரசாங்கத்தின் பதவிக் காலம் பொதுத்தேர்தல் நடத்தப்படாமலே நீடிக்கப் பட்டுவிட்டதால் தாம் நினைத்தபடியெல்லாம் விலைவாசிகளுடன் விளையாடலாமென்று தனியார்துறையின் பெரும்புள்ளிகளும்அதிகாரி வர்க்கமும் நினைத்துவிடக் கூடாது.

## இடைவிடாத உண்ணாவிரதம்

1970ம் ஆண்டு தரப்படுத்தலை எதிர்த்து ஆரம்பமான தமிழ் மாணவர் ஆர்ப்பாட்டத்தை அன்றைய அரசுபுறக்கணித்தது- அக்கறை காட்டாமல் அலட்சியப்படுத்தியது. அதன் விளைவை பின்னர் கண்டோம்.

விரக்தியுற்ற இளைஞர்கள் தீவிர இயக்கங்களிலும், துணிச்சலான காரியங்களிலும் ஈடுபடலானார்கள்.

அது தமிழர் சமுதாயத்தைப் பெரிதும் பாதித்துள்ளது ஒருபுறமிருக்க இந்த நாட்டு அரசாங்கத்துக்கே பெரும் சவாலாகவும்வளர்ந்துள்ளது. அன்றைய தலைமுறையைச் சேர்ந்த மாணவர்கள் இன்று எந்நிலையில் இருக்கிறார்கள் என்று ஆராய்ந்தால் சுவையான தகவல்கள் பல வெளிவரக் கூடும்.

அன்று நடந்த ஆர்ப்பாட்டத்தை விட பெரும் எடுப்பில் மாணவர் ஆர்ப்பாட்டம் ஒன்று சில தினங்களுக்கு முன் யாழ்ப்பாணத்தில் நடந்துள்ளது.

பயங்கரவாத சட்டத்தை எதிர்த்தும், கைது செய்யப்பட்ட மத குருமார்களையும் வேறு பலரையும் விடுதலை செய்யும்படி கோரியும் இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டுள்ளது தமது கோரிக்கைகள் நிறைவேறும் வரை இடைவிடாத உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றை நேற்றுமுதல் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மாணவர்கள் ஆரம்பித்துள்ளார்கள்.

இன்றைய அரசும், அதிகாரிகளும் மாணவர்களின் இந்த போராட்டத்தையும் நியாயமான அவர்களின் கோரிக்கைகளையும் அன்று போல் அலட்சியம் செய்து விடமாட்டார்கள் என்றே நம்புகிறோம். அலட்சியப் போக்கின் விளைவு அனர்த்தமாகவே இருக்கும்!

# "திருகோணமலை தேசிய ஐக்கியத்தின் சின்னமாக விளங்குகின்றது"

## இலவச பாடப்புத்தக விநியோக வைபவத்தில் ஜனாதிபதி

(திருகோணமலை)

"இந்த அரசாங்கத்தின் இலவசப் பாடப்புத்தக விநியோகம் மூலம் இலவசக் கல்வியின் உன்னதமான இலட்சியம் பூரணத்துவமடைந்துள்ளது. கல்வியின் மூலமே இளம் சந்ததியினர் அறிவைப்பெற்று வாழ்க்கையில் வெற்றிபெறமுடியும்."

இவ்வாறு ஜனாதிபதி திரு. ஜே ஆர் ஜெயவர்த்தனநேற்று முன்தினம் திருகோணமலை செல்ஜோசப்கல்லூரி மாணவர்களுக்கு இலவச பாடநூல்களை வழங்கும் வைபவத்தில் உரையாற்றுகையில் கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

"1980ம் ஆண்டிற்கு முன்னர் வறியபிள்ளைகள் பாடப் புத்தகங்களை வாங்கமுடியாத நிலையிலிருந்தனர் இந்த அரசாங்கத்தின் இலவச பாடப் புத்தக விநியோகத்தின்மூலம் ஏழைப் பிள்ளைகள் பயனடைந்துள்ளனர்.

"திருகோணமலை மாவட்டம் தேசிய ஐக்கியத்தின் சின்னமாக விளங்குகிறது. எந்த ஒரு அரசாங்கத்தின் கீழும் நாட்டின் பிரச்னைகளுக்கு தீர்வுகாணப்படவேண்டும்.


"எமது அரசாங்கம் 10 லட்சம் பேருக்கு வேலைவாய்ப்பை பெற்றுக்கொடுக்கவுள்ளது. உலக நாடுகளில் பொருளாதார மந்தநிலை இன்று நிலவி வருகிறது.

"வாழ்க்கைச் செலவுப் பிரச்னை 'அரசின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டது. திருகோணமலை மாவட்டத்திற்கான அபிருத்தித்திட்டமொன்றை தயாரித்துத்தரும்படி மாவட்ட எம். பிக்களைக் கேட்டுள்ளேன்" என்றார்.

திருகோணமலை எம். பி. திரு. இரா. சம்பந்தன் இவ்வைபவத்தில் உரையாற்றுகையில்;-

"இந்த நாட்டில் 1943ம் ஆண்டு கொண்டுவரப்பட்ட இலவசக் கல்விமுறை, இலவசப் பாடப்புத்தக விநியோகத்தின் மூலம் பூரணமாக்கப் பட்டுள்ளது. திருகோணமலை மாவட்டத்திலுள்ள பாடசாலைகளில் நிலவிவரும் குறைபாடுகளை அரசாங்கம் நிவர்த்தி செய்யவேண்டும். இம்மாவட்டத்தில் தொழில்நுட்பக் கல்லூரியொன்று அமைக்கப் படவேண்டும்" என்றும் கூறினார்.

இவ்வைபவத்தில் கல்வியமைச்சர் திரு. ரணில்விக்கிரமசிங்கா, கல்விச் சேவைகள் அமைச்சர் திரு. லயனல் ஜெயதிலகா, திருகோணமலை மாவட்ட அமைச்சர் திரு. எச். ஜி. பி. நெல்சன் உட்படப் பலர் உரையாற்றினர். (வெ)



ஆயிரமா யிரங்கிரண வருணனுடை
அங்கமெல்லாந் தங்கமெனத் தொங்கிப் போர்க்கத்
தூயகலைப் பாதிமதிச் சோதி பொங்கித்
துணைமலரி னடிபணிய மின்னுந் தாரை
பாயுமொளி தோயுமணி, மகுடஞ் சூட்டப்
பரமதிருக் குமரனொடு பவிங்குத் தேர்மேல்
தாயே நீர் எழுந்துமது சேயோ ரெம்மைத்
தாங்க வரும் பாங்குரைக்கத் தக்கார் யாரே.

யாழ். ஜெயம்.

## முத்துமாரி அம்மன் உற்சவம்

(மாத்தளை)

மாத்தளை ஸ்ரீமுத்துமாரியம்மன் ஆலய வருடாந்த உற்சவம் பெப்ரவரி 8ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு பெப்ரவரி 25ம் திகதி அன்னதானமும், 26ம் திகதி தேர்உற்சவமும், 28ம் திகதி தீர்த்தோற்சவமும், மார்ச் முதலாம் திகதி பூங்காவன உற்சவமும் நடைபெறும்.

# புதுமைத் தாயின் தேர்க்கோலம்

"அலை தவழும் குருநகரின் அருள் தவழும் நற்பதி யாழ். புதுமை மாதா கோவில். இங்கு கோயில்கொண்டெழுந்தருளியிருக்கும் மரியன்னை அருளிய அருளும் அற்புதங்களுக்கு, அதிசயங்களுக்கு அளவேயில்லை. ஆதலால் அன்னையின் இத்திருப்பதி புதுமை மாதா கோவிலென்னும் அன்புப்பெயரைப் பெற்றுவிட்டது. நாளும் நாடிவரும் தேடிவரும் அன்பர்க்கு அயர்வின்றி அள்ளி வழங்கும் அருள் அன்னையின் தேர்த்திருவிழா மரியாள் கிறிஸ்துவை காணிக்கையாக ஒப்புக்கொடுத்த திருநாளாகிய மாசி 2ல் இடம்பெறும் வழமை உண்டு. புதுமைமாதா புன்னகை முகத்தில் தாங்கி பொன்நகை புத்தாடைபூண்டு செபமாலை ஒரு கையில், செகமாளும் பாலயேசு மறுகையில் ஜொலிக்க கருணைத் தாயாக யாழ். மண்ணின்மீது தேரேறி வரும் தேர்க்கோலம் காணக் கண் கோடிவேண்டும்.

இன்றைய காணிக்கைத் திருநாளைப் பற்றி சிந்திப்பதன் மூலம் மனித-இறைத்தொடர்பின் வலிமையை நாம் நன்குணரலாம். யூத சூல வழக்கப்படி குழந்தையை பிறந்த நாற்பதாம்நாள் ஆலயத்தில் ஆண்டவனுக்கு காணிக்கையாகக் கொடுப்பது மரபு. இம்மரபிற்கேற்ப பார் வந்துதித்த பரம்பொருளாம் கிறிஸ்துவை காணிக்கையாக்கிய திருநாளே சுத்திகரத் திருநாள் எனும் இந்நாள். படைப்பின் தலைவனை பிதாவாகிய பரம்பொருளுக்கு ஒப்புக்கொடுக்கும் பெரும்பேறு கிறிஸ்துவின் தாயாகிய மரியாளுக்குக் கிட்டியது. இதன்மூலம் ஒவ்வொரு மனிதனும் அன்பு அன்னையால் தான் ஆண்டவனுக்கு உரித்தாக்கப்படமுடியும்- உடமையாக்கப்படவேண்டும் என்ற பேருண்மை வெளிப்படுத்தப் பட்டது.

பற்றிமாகரன்.

## மேலும் உதவவேண்டும்

அண்மையில் தமிழ்நாட்டிலிருந்து ஈழத்திற்கு விஜயம் செய்திருந்த சுற்றுலாவினர் கிளிநொச்சியில் பசரிய மினிபஸ் விபத்தினால் மூவர் இறந்ததும் பலர் காயமுற்றதும் நாமறிந்த செய்தியாகும். இக்காலத்தில் கிளிநொச்சி காந்தீய இயக்கம் இவர்களுக்கு சகல விதமான உதவிகளும் செய்து வைத்தியசாலைக்கு தங்கள் வாகனங்கள் மூலம் அனுப்பி வைத்தது மட்டுமன்றி இறந்தவர்கள் சடலங்களையும் தலைமன்னார் வரை கொண்டுசென்று தமிழ்நாட்டிற்கு அனுப்பி வைத்ததையும் குறிப்பிடத்தக்கது. மேற்கூறியவையெல்லாம் திறம்பட நடப்பதற்கு எதிர்க்கட்சி முதல்வர், யாழ்ப்பாணம், நல்லூர். கோப்பாய் பாராளுமன்ற உறுப்பினர்களும் யாழ். மாநகரசபை முதல்வரும் மற்றும் வர்த்தகப் பிரமுகர் முன்னின்று உழைத்தார்கள். இது யாழ்ப்பாணத்து மக்களின் பெருந்தன்மையை ஓரளவு காட்டியுள்ளது எனக் கூறின் மிகையாகாது.

ஆனால் காயமுற்றவர்களில் பத்துக்கு மேற்பட்டவர்கள் இன்னமும் யாழ். பெரியாஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகிறார்கள். இவர்களுக்கு விரும்பிய உண்டியும் உடையும் வர்த்தகப் பிரமுகர்களும் கருணையுள்ள கனவான்களும் நல்கவேண்டும். அத்துடன் இறந்தவர் குடும்பத்திற்கும் காயமுற்றோருக்கும் பிரயாணிகள் இன்சூரன்ஸ் திட்டத்திலிருந்து அவர்கள் தமிழ்நாடு செல்வதற்கு முன்பதாக நஷ்டஈடு பெறும் வழிவகைகளை இது சம்பந்தமான விடயங்களில் பரிச்சயமுற்றவர்கள் செய்திட முன்வரவேண்டும்.

க- சி. இராஜேஸ்வரன்
92, ஆடியபாத வீதி,
நல்லூர்.

## மக்கள் கருத்து

## முதியோர் தின விழா

[புலோலி]

வல்வெட்டித்துறை வடக்கு தெற்கு சிரமோதய சபைகளின் முதியோர்தினவிழா இம்மாதம் 6ம் திகதி வல்வை சிவகுருவித்தியாலய மண்டபத்தில் சிரமோதய சபைத் தலைவர் திரு ஆர். வல்லிபுரம் தலைமையில் நடைபெறவுள்ளது. வட மராட்சி வடக்கு கிழக்கு பிரிவு உதவி அரசாங்க அதிபர் வை வேலும்மயிலும் இம்முதியோர் தின விழாவிலே பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கிறார்.

"கோரிக்கைகளை அமுல் படுத்தி

# கைதானவர்களை விடுதலை செய்தபின்பே அரசுடன்பேச்சு!

## கட்டுவன் கூட்டத்தில் அமிர்தலிங்கம்

(யாழ்ப்பாணம்)

"அரசாங்கத்துடன் நாம் முன்னர் பேச்சுவார்த்தை நடாத்தி சில கோரிக்கைகளை முன்வைத்தோம். அந்தக் கோரிக்கைகளை அரசு அமுல் செய்யவேண்டும்; கைதுசெய்யப்பட்டுள்ள மகுருமார், டாக்டர், விரிவுரையாளர் தம்பதிகள், மாணவர்கள், இளைஞர்கள் விடுதலைசெய்யப் படவேண்டும்; அதன் பின்னர் அரசாங்கம் முன்வந்தால் அரசுடன் பேச்சுவார்த்தை நடத்துவோம்"

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவரும், காங்கேசன்துறைத் தொகுதி எம். பி. யுமான திரு. அமிர்தலிங்கம் தமிழர் விடுதலைக்கூட்டணியின் கட்டுவன் மத்தியகிளைப் பொதுச் சபைக் கூட்டத்தில் தலைமையுரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டார்.

கூட்டணியின் தொகுதி அமைப்பாளரும் 'தமிழ்இளைஞர் பேரவை' இளைஞர் இயக்கச் செயலாளர் திரு. மாவை சேனாதிராசா, காங்கேசன்துறை பிரதேசசபைத் தலைவரும், எதிர்க்கட்சித்தலைவரின் காங்கேசன்துறைத் தொகுதி செயலாளருமான திரு. சிவமகாராஜா மற்றும் கூட்டணிப் பிரமுகர்களும் கலந்துகொண்டனர்.

### 'சேகுவேரா' இயக்கத்தினருக்கு மன்னிப்பு

திரு. அமிர்தலிங்கம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது: "சிறீலங்கா சுதந்திரக்கட்சி அரசினால் கைதுசெய்யப்பட்டு சிறைவைக்கப்பட்ட சேகுவேரா இயக்கத்தைச் சேர்ந்தவர்களுக்கு மன்னிப்பு வழங்கி விடுதலைசெய்த அரசாங்கம், ஏன் இவர்களை விடுதலைசெய்யக்கூடாது?

### அரசுடன் பேச்சு நடத்தும் சூழ்நிலையில்லை

அரசுடன் பேச்சுவார்த்தை நடாத்தவேண்டிய சூழ்நிலை எமக்கு ஏற்படவில்லை. பேராசிரியர் வில்சன் அண்மையில் இங்கு வந்தபொழுது அரசுடன் பேச்சுவார்த்தை நடாத்திவிட்டு எங்களையும் சந்தித்துப்பேசினார். ஜனாதிபதி தேர்தலுக்குப் பின்னர் நாங்கள் அரசுடன் எதுவித பேச்சுவார்த்தையும் நடாத்தவில்லை".

"கடந்த ஏழு, எட்டு ஆண்டுகளாக எமது இனத்தின் விடுதலைகோரி பல போராட்டங்களை நடாத்திவருகிறோம். ஓரினம் சுதந்திரம் பெறுவது, தேதி குறிப்பிட்டுப் பெறுவதொன்றல்ல

"எங்களுக்கு எதுவித இன்னல்களையும் பயமுறுத்தல்களையும் அரசாங்கம்மேற்கொண்டபோதும், எமது தமிழீழ இலட்சியத்திலிருந்து இம்மியளவும் விலகமாட்டோம். எமது இயக்கத்தைச் சிர்குலைய விடாத ஒற்றுமையாகவும் கட்டுக்கோப்பாகவும் இருந்து இனவிடுதலைக்கு செயல்படவேண்டும்.

காங்கேசன்துறைத் தொகுதியில் தந்தை செல்வநாயகம் போட்டியிட்டகாலத்திலிருந்து கட்டுவன் பகுதி பலம்வாய்ந்ததாக இருந்து வருகிறது.

"தேர்தலில் கட்டுப்பணம் செலுத்தவதிலிருந்து, கட்சியின் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளில் துணிச்சலுடன் இப்பகுதி ஈடுபட்டுவருவது எமது இயக்கத்துக்கு பெருமையளிப்பதாகும்.

### எமது இயக்கத்தை கூறுபோடமுயற்சி

"பலவித இன்னல்களுக்கும் மத்தியில் தமிழ் மக்கள் வாழ்ந்துகொண்டிருக்கும் இந்தக்காலகட்டத்தில், குட்டி இயக்கங்கள் தோன்றி எமது இனத்தைக் கூறுபோட முயன்று வருகின்றன. என்றார்.

கட்டுவன்மத்தியகிளைக்கான நிர்வாகிகள் தெரிவும் நடைபெற்றன. (மா)

## ஜாதிக சம்பத சுவீப் முடிவு

(கொழும்பு)

கொழும்பில் நேற்றுமுனதினம் இழுக்கப்பட்ட மகாஜன சம்பத சுவீப் முடிவுகள் வருமாறு:

முதலாவது பரிசு

**05 F 0665**

**ரூ. 2,75,100**

இரண்டாவது பரிசு

**20 F 0808**

**ரூ. 1,37,550**

மூன்றாவது பரிசு

**15 X 0334**

**ரூ. 45,850**

தலா ரூ, 779-45 சதம் ஆறுதல் பரிசு பெறும் நூறு டிக்கட்டுகள் வருமாறு:-

| | |
|---|---|
| 05 A 0709 | 08 A 0124 |
| 08 A 0785 | 11 A 0116 |
| 16 A 0830 | 21 A 0436 |
| 07 B 0337 | 13 B 0514 |
| 14 B 0497 | 02 C 0860 |
| 04 C 0768 | 04 C 0782 |
| 08 C 0202 | 16 C 0975 |
| 18 C 0358 | 18 C 05 3 |
| 11 D 0228 | 15 D 0725 |
| 02 E 0735 | 10 E 0919 |
| 18 E 0978 | 19 E 0656 |
| 04 F 0484 | 05 F 0866 |
| 08 F 0495 | 12 F 0705 |
| 19 F 0030 | 02 G 0621 |
| 05 G 0834 | 07 G 0585 |
| 12 G 0145 | 18 G 0823 |
| 04 H 0478 | 11 H 0205 |
| 21 H 0138 | 04 J 0285 |
| 06 J 0932 | 09 J 0569 |
| 13 J 0931 | 16 J 0623 |
| 07 K 0603 | 05 K 0216 |
| 19 K 0697 | 01 M 0480 |
| 08 M 0149 | 08 M 0679 |
| 09 M 0161 | 15 M 0179 |
| 19 M 0074 | 02 N 0088 |
| 12 N 0478 | 14 N 0581 |
| 17 N 0390 | 21 N 0548 |
| 01 O 0208 | 06 O 0461 |
| 08 O 0157 | 10 O 0312 |
| 11 O 0207 | 02 P 0988 |
| 06 P 0814 | 07 P 0043 |
| 12 P 0017 | 13 Q 0117 |
| 04 R 0487 | 08 R 0980 |
| 18 R 0395 | 19 R 0405 |
| 12 S 0209 | 12 S 0713 |
| 12 S 0834 | 02 T 0667 |
| 14 T 0465 | 20 T 0216 |
| 06 U 0977 | 07 U 0603 |
| 07 V 0073 | 09 V 0448 |
| 10 V 0977 | 14 V 0365 |
| 03 W 0560 | 04 W 0897 |
| 13 W 0 59 | 16 W 0367 |
| 17 W 0898 | 20 W 0007 |
| 08 X 0675 | 09 X 0299 |
| 16 X 0074 | 02 Y 0337 |
| 02 Y 0597 | 10 Y 0077 |
| 16 Y 0139 | 17 Y 0861 |
| 03 Z 0301 | 04 Z 0139 |
| 05 Z 0941 | 10 Z 0263 |
| 18 Z 0367 | 21 Z 0299 |

[இவையாவும் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.]

## அண்ணன் கண்டித்தார்: தம்பி தற்கொலை!

[மாவிட்டபுரம்]

தோட்ட வேலையில் கவனம் செலுத்தாத தம்பியாரை அண்ணன் கண்டித்தது விபரீதமாகியது. அண்ணனின் கண்டிப்பால் மனமுடைந்த தம்பி நஞ்சருந்தி தற்கொலை செய்துகொண்டார்.

அளவெட்டியைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை வேலாயுதம் [வயது20 என்பவரே இவ்வாறு மரணமானவராவார்

இம்மரணம் குறித்து திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு நா. தம்பிராஜா விசாரணை நடத்தினார்.

காலமானவர் தோட்டவேலையில் கவனம் செலுத்தாது தமது நண்பர்களுடன் சேர்ந்து படம் பார்ப்பதிலும், வீணே சுற்றித் திரிவதிலும் நேரத்தை செலவிட்டு வந்ததையடுத்து தமையனரான கணபதிப்பிள்ளை கந்தசாமி என்பவர் கண்டித்ததாகவும், அதன் காரணமாக மனமுடைந்து நஞ்சருந்தியதாகவும் விசாரணையின் போது தெரியவந்தது.

தற்கொலை என தீர்ப்பு வழங்கப்பட்டது.

சுன்னாகம் பொலிசைச் சேர்ந்த கான்ஸ்டபிள் எஸ். இராஜரத்தினம் சாட்சிகளை ஆஜர் செய்தார்.

## கடத்தல் மரங்கள் சிக்கின: சந்தேகநபர் ரிமாண்டில்

[துணுக்காய்]

அனுமதிபத்திரமின்றி 8 முதிரைமரங்களையும் 8 பாலை மரங்களையும் ஏற்றிவந்த உழவுயந்திரத்துடன் இருவர் கைதுசெய்யப்பட்டு றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளனர்.

துணுக்காய் உதவி அரசாங்க அதிபர் க. குலேந்திராவின் முயற்சியினால் இம் மரக்கடத்தல்முறியடிக்கப்பட்டது.

ரகசிய தகவல் ஒன்றையடுத்து உதவி அரசாங்க அதிபர் க. குலேந்திரா, கிராம சேவை அலுவலர் கு. ஞானேஸ்வரன் விசேட சேவை அலுவலர் ச. மரியதாசன் ஆகியோர், கோட்டை கட்டிய குளத்தில், தேடுதல் வேட்டையில் ஈடுபட்டபோது இம் மரங்கள் சிக்கின.

உழவுயந்திரம், பெட்டி, மரங்கள் துணுக்காய் உதவிஅரசாங்க அதிபர் காரியாலயத்திற்கு கொண்டுவரப்பட்டு பாதுகாப்பாக வைக்கப்பட்டது. சந்தேகநபர்கள் மாங்குளம் பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

முல்லைத்தீவு நீதிமன்றத்தில் சந்தேகநபர்களான நா. மார்க்கண்டு, வ. தியாகலிங்கம் ஆகியோர் ஆஜர் செய்யப்பட்டு றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளனர். (க)

# அரச பதவி வெற்றிடங்கள்

இலங்கை தரைப்படையில் பின்வரும் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரியின் வயதெல்லை 18 தொடக்கம் 28 வரையாகும். விண்ணப்பம் அனுப்புவதற்கான கடைசித் திகதி வருகிற 21-02-83 ஆகும். விபரங்களுக்கு 21-01-83 வர்த்தமானி பார்க்கவும்.

### பதவிகள்

(அ) 1. 4ம் அணி துப்பாக்கி வீரன் – தொழில் நுட்பவியலாளர்

(ஆ) 1. ஏந்திரபடை வீரன் (தச்சர்)

2. எந்திரப்படைவீரன் [மின்சாரப் பகுதி]

3. எந்திரப்படைவீரன் (எந்திரக் கருவி பொருத்துவோர்)

4. எந்திரபடை வீரர் [தொழில் நுட்ப பண்டகசாலையாளர்)

5. எந்திரப்படை வீரர் [கடைச்சந்தகாரர்]

(இ) 1ம்அணி இலங்கைச் சைகைப்பணி:

1. சைகை வீரர் – ரேடியோ தொழில் நுட்பவாளர்

2. சைகை வீரர் – தொலைபேசி தொழில் நுட்பவாளர்

(ஈ) கட்டுவேலை சேவை இலங்கைஎந்திரிமார்:

1, அளவையாளர் – லயன்ஸ் கோப்ரல்

2. லயன்ஸ் கோப்ரல் – தொழில் முகாரி [கட்டிடம்]

3. லயன்ஸ் கோப்ரல் – மின்சாரப் பொறிமுறை

4. எந்திரப்படை வீரர்

(உ) இலங்கை தரைப் படைபோர்க்'கருவி சிறப்பணி:

1. படையினர்– உபகரணங்கள் பழுது பார்த்தல்

2. படையினர் – தையற்காரர்

3. படையினர் – சப்பாத்து பழுதுபார்ப்போர்

4. படையினர் – தொழில் நுட்ப எழுதுவினைஞர்

(ஊ) இலங்கை தரைப் படைச்சேவை சிறப்பணி:

1. படையினர் – பண் சுடுபவர்

2. படையினர் – மின்சார தொழில்வலர்

3. படையினர் – நிறம் பூசுவோர்

4. படையினர் - சாய்ச்சி ஒட்டுவோர்


(ஏ)எல்லாக் கூறுகளும்:

1. படையினர் – சமையக்காரர்

2. படையினர் – எழுதுவினைஞர்

3. படையினர் – சாரதிகள்

## எதிர்பாராத மறைவு!



நல்ல உள்ளங்களை இளம் வயதிலேயே பிரிந்துவிடுகிறோம்! நீண்ட காலத்துக்கு அவர்களை இவ்வுலகில்வைத்து கஷ்டப்படுத்தஇறைவன்விரும்புவதில்லைப்போலும்!

யாழ்ப்பாணம் தபால் நிலயத்தில் அதிபராகக் கடமையாற்றிய நீர்வேலியைச்சேர்ந்த நல்லையா தனபாலசிங்கம் இளம்வயதிலேயே இறைவனடி எய்திவிட்டார்.

அவரது பிரிவு என்னைப் போன்ற இனிய நண்பர்களையும், அவரது சுற்றத்தார்களையும், உற்றார்களையும் மிகுந்த கவலைக்குள்ளாக்கிவிட்டது.

படிக்கும் காலத்தில் கிரிக்கெட், உதைபந்தாட்டம் போன்ற விளையாட்டுக்களில் சிறந்து விளங்கியதால், இளைஞர் வட்டாரத்தில் அவர் பிரசித்திபெற்றிருந்தார்.

நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் படித்த தனபாலசிங்கம் ஆசிரியர், மாணவர்களின் அன்புக்குரியவராக இருந்து பாடசாலைக்குப் பெருமைசேர்ப்பித்தார்! பின்னர் கோப்பாய் கிறித்தவக் கல்லூரியில் கல்வி பயின்றார்.

சமூக சேவை இயக்கங்களுடனும் மிகநெருங்கிய தொடர்பு கொண்டவராக இருந்தார். நீர்வேலி மத்து இளைஞர் சன சமூகநிலையம் தனது அஞ்சலியில் "யாரும் எதிர்பாராத இந்தத் திடீர் மறைவு யாருக்கு யார் ஆறுதல் சொல்வது என்பது முடியாத நிலையில் தவிக்கின்றோம். அதனால் உண்டாகும் கண்ணீர் துளிகள் எப்பொழுதுதான் ஓயுமோ, யார் அறிவார்?" என்று தெரிவித்திருப்பது, அவர்மீது அப்பகுதி மக்கள்கொண்டுள்ளபற்றினைத் தெட்டத் தெளிவாக்குகிறது

எஸ். சிவநேசன்

## தைப்பூசவிழா

[சரவணை]

சரவணை 'தேவபுரம்', அருள்மிகு ஸ்ரீசதிர்வேலாயுத சுவாமி திருக்கோவிலில் 'தைப்பூச விழா' சிறப்பாக நடைபெற்றது பகல் நடைபெற்ற அபிஷேக ஆராதனையில் கிராமமக்கள் பலர்கலந்துகொண்டனர்.

## இலவச வகுப்பு நலன்புரிச்சங்கம் ஏற்பாடு

[புலோலி]

வல்வெட்டித்துறை மக்கள் வங்கி ஊழியர் நலன்புரிச்சங்கம், பாடசாலையை விட்டுவிலகிய இளைஞர் யுவதிகளுக்கான தமிழ் சுருக்கெழுத்து பயிற்சிவகுப்பொன்றை நடத்தவுள்ளது

வல்வெட்டி அமெரிக்கன் மிஷன் பாடசாலையில் பிரதி செவ்வாய்க் கிழமைகளிலும் வியாழக்கிழமைகளிலும் நடைபெறவுள்ள இவ்இலவச தமிழ் சுருக்கெழுத்துப் பயிற்சி நெறியைமேற் கொள்ள விரும்பும் இளைஞர்கள், யுவதிகள் நலன்புரிச்சங்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளனர்.

நீர்வேலி கொலை கொள்ளை வழக்கு:

# "நடேசுதாசனின் முழங்காலிலிருந்து இரத்தம் ஓடிக்கொண்டிருந்தது"

## தனிவிசாரணையில் மேஜர் ஸஹீர் சாட்சியம்

[இ. கந்தசாமி]

"1981ம் ஆண்டு ஜூலை மாதம் ஆனைக்கோட்டை பொலிஸ் நிலையம் தாக்கப்பட்ட பின்னர் பலாலி இராணுவ முகாமில் பல அவசர, விசேட பயிற்சிகளையும், நடவடிக்கைகளையும் மேற்கொண்டோம். இவ்வாறு அவசர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் சமயத்தில் பலாலி இராணுவ முகாமில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த நடேசுதாசுக்கு விலங்கிட்டோம்."

இவ்வாறு இராணுவ மேஜர் அப்துல் ஸஹீர், நீர்வேலி வங்கிக்கொள்ளை இரட்டைக் கொலை வழக்கினுள் நடைபெற்றுவரும் 'வொயர் டயர்' என்ற விசாரணைக்குள்ளான விசாரணையில் சாட்சியமளிக்கையில் கூறினார்.

கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நீதிபதி திரு. ஸி. எல். ரி. மூனமலே முன்னிலையில் விசாரணை நடைபெற்று வருகிறது.

மேஜர் அப்துல் ஸஹீர் அளித்த சாட்சியத்தை அரச சட்டத்தரணி திரு. காந்திலால் குமாரசிறி நெறிப்படுத்தினர்.

81ம் ஆகஸ்ட் மாதத்தில் பலாலி இராணுவ முகாமில் ஒரு பகுதிக்குப் பொறுப்பாக இருந்தேன்.

"அதே ஆண்டு ஆகஸ்ட் மாதம் 7ம் திகதி பிற்பகல் 5 அல்லது 6 மணியளவில் காப்டன் மாயாதுன்னையும், சப் இன்ஸ்பெக்டர் உடுகம்பலவும் நடேசுதாசனை பலாலி இராணுவ முகாமுக்கு கூட்டி வந்து அவரை இராணுவப் பாதுகாப்பில் வைக்குமாறு கேட்டுக் கொண்டனர்.

"அவருக்குசாப்பாட்டுநேரங்களில் சாப்பாடும் தண்ணீரும் கொடுக்குமாறும் சி. ஐ. டி. அதிகாரிகள் எம்மிடம் கேட்டுக்கொண்டனர். நாமும் கொடுத்தோம். எனது அறைக்கு அருகே இருந்த நான் பாவிக்கும் மலசல கூடத்தையே அவரும் பாவிக்கக் கூடியதாக இருந்தது.

7ம் திகதி இரவு சந்தேக நபரின் நலன்களைக் கவனிப்பதற்காக அவர் வைக்கப்பட்டிருந்த அறைக்குஒரு தடவை சென்றேன். அவர் அன்று சாரம் அணிந்திருந்தார். அவரது வலது காலில் முழங்காலுக்குகீழ்காயம்இருப்பதைஅன்று இரவு கண்டேன். அக்காயத்திலிருந்து இரத்தம் ஓடிக் கொண்டிருந்தது. அது ஒரு ஆபத்தான காயமாகத் தெரியவில்லை. தடுப்புக்காவல் கட்டளை வழங்கும் வரை பலாலி முகாமில் நடேசுதாசன் வைக்கப்பட்டிருந்தார். அங்கு காவலில் இருந்தது அதே மாதம் 10ம் திகதி வரையாக இருக்கலாம். அதன் பின் ஆனையிறவு முகாமுக்கு எடுத்துச் செல்லப்பட்டார்.

7, 8, 9, 10, திகதிகளில் சந்தேகநபரை நான் பார்க்கப் போனபோது சில சமயங்களில் அவர் அங்கிருந்தமெத்தையை நிலத்தில் போட்டு படுத்திருந்தார். சில சமயங்களில் அவர் எழுந்திருந்தார்.

### சிகிச்சை அளிக்கப்பட்டது

"முகாமிலிருந்த டாக்டர் பெர்னாண்டோ சந்தேக நபரின் காலிலிருந்த காயத்திற்குச் சிகிச்சை செய்தார்.

"நீர்வேலி வங்கிக்கொள்ளை இரட்டைக் கொலை பற்றிய விசாரணைகளில் நான் என்றுமே ஈடுபடவில்லை

நடேசுதாசன் மீது சித்திரவதை, துன்புறுத்தல் நடவடிக்கைகளை நான் மேற்கொள்ளவில்லை. எனக்குக்கீழ் பணிபுரிபவர்களோ அல்லதுஎன்னுடன் பணிபுரிபவரோ நடேசுதாசனை தாக்கியதையோ சித்திரவதை செய்வதையோ துன்புறுத்துவதையோ நான் காணவில்லை.

பொலிஸ் அதிகாரிகள் யாராவது இந்த எதிரியை மனிதாபிமானமற்ற முறையில் தாக்கியதாயோ துன்புறுத்தியதாகயோ நான் அறிந்திருக்கவில்லை.

எமது முகாமுக்குள் இவ்வாறு நடந்திருந்தால் அது பற்றி எனக்குத் தெரியவந்திருக்கும். இந்த நபர் அடைத்து வைக்கப்பட்டிருந்த அறையிலிருந்து தாக்கும் சத்தமோ துன்புறுத்தும் சத்தமோ என்றுமே கேட்டதாகவும் இல்லை'

எதிரிகள் தரப்பில் ஆஜரான சிரேஷ்ட சட்டத்தரணி எஸ். சந்தியேந்திரா சாட்சியை குறுக்கு விசாரணை செய்தார்.

### சாட்சிக்கு அனுமதி

சத்; யாழ்ப்பாணத்தில் எத்தனை இராணுவ முகாம்கள் உள்ளன?

தேசிய பாதுகாப்புக்கருதி இக் கேள்விக்குப் பதில் அளிப்பதற்கு சாட்சி நீதிமன்றத்தின் அனுமதியைக் கோருகிறார். சாட்சி வெளியே அனுப்பப்பட்டு பிரதி சொலிஸ்டர் ஜெனரல் விளக்கம் அளித்த பின் இக் கேள்விக்கு பதில் அளிக்காதிருக்க சாட்சிக்கு அனுமதி வழங்கப்படுறது.

சத்: 81ம் ஆண்டு ஜூன் மாதம் மாவட்ட அபிவிருத்தி சபைத் தேர்தல் காலப்பகுதியில் யாழ்ப்பாணம் நூல் நிலையம் எரிக்கப்பட்டது தெரியுமா?

சா: தெரியும்.

சத்; பிரிகேடியர் திஸ்ஸ வீரதுங்கா யாழ். நூல்நிலையம் எரிக்கப்படுவதற்கு முன்னரா பின்னரா யாழ்ப்பாணத்தில் பதவி ஏற்றார்?

சா: அதன்பின்னராக இருக்கலாம்.

சத்: அவர் மீண்டும் எப்போது அங்கு பதவி ஏற்றார்?

சா: ஆனைக்கோட்டை பொலிஸ் நிலையம் தாக்கப்பட்டபின்னர்.

### ஆனைக்கோட்டை பொலிஸ்நிலையம்

சத்: ஆனைக்கோட்டை பொலிஸ் நிலையம் எப்போது தாக்கப்பட்டது?

சா; 1981ம் ஆண்டு ஜூலை மாதம் 27ம் திகதி இரவு 28ம் திகதி அதிகாலை.

சத்: யாழ்ப்பாணத்தில் தமிழ் ஈழவிடுதலை இயக்கம் என ஒரு இயக்கம் இருந்தது பற்றி தெரியுமா?

சா: தெரியும்.

சத்: வடக்கில் இந்த இயக்கம் பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தது தெரியுமா?

சா; ஆம்.

### வடக்கில் பயங்கரவாதம்

சத்: வடக்கில் பயங்கரவாதத்தை இல்லாதொழிக்கும் பணி இராணுவத்திற்குக் கொடுத்தது தெரியுமா?

சா: பலாலியில் எனது அலுவலகம் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுபவர்களுக்கு உதவவே நிறுவப்பட்டிருந்தது. 79ம் ஆண்டு நடுப்பகுதியிலிருந்து 79ம் ஆண்டு இறுதி வரையிலான 6 மாத காலத்தில் யாழ்ப்பாணத்தில் பயங்கரவாதத்தை அழித்தொழிக்கும் உத்தரவு இராணுவத்திற்கு அளிக்கப்பட்டிருந்தது தெரியுமா? (பிரதி சொலிஸ்டர் ஜெனரல் இக் கேள்வியை ஆட்சேபிக்கிறார். ஆட்சேபனை ஏற்கப்படுகிறது)

சத்: இந்தச் சாட்சிக் கூண்டிலிருந்து நீர் பொய் கூறுகிறீர் என்று நான் சொல்லுகின்றேன்.

சா: நான் அதை மறுக்கிறேன்.

சத்: யாழ்ப்பாணத்தில் பயங்கரவாதத்தை அழித்தொழிக்கும்மாறு இராணுவத்தினருக்கு இடப்பட்ட உத்தரவை மறைக்க நீங்கள் முயற்சிக்கிறீர் என்கிறேன்.

சா: நான் கடமையாற்றிய காலத்தில் குறிப்பாக அத்தகைய உத்தரவுகள் தரப்படவில்லை. சட்டத்தையும் ஒழுங்கையும் நிலை நாட்டுவதற்கு பொலிசாருக்கு உதவவும் கள்ளக்கடத்தலைத் தடுக்கவுமே எமக்கு உத்தரவு தரப்பட்டது.

### பலாத்காரம்

சத்; எனது கேள்வி என்னவெனில் யாழ்ப்பாணத்தில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டும் பணியில் பயங்கரவாதத்தை ஒழிப்பதும் அடங்கியிருந்ததா?

சா: எமக்குத் தரப்பட்ட கடமை சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதற்கு பொலிசாருக்கும் அரசாங்க அதிபருக்கும் உதவ வேண்டும் என்பது. அந்தப் பணிகளை மேற்கொள்ளும்போது தேவையான அளவுக்கு பலாத்காரம் பாவிக்கவேண்டி ஏற்பட்டது.

சத்: எனது கேள்விக்கு நீங்கள் நேரடியாக பதில் அளிக்காமல் வேறு விஷயங்களைக் கூறி சமாளிக்கப் பார்க்கிறீர்?

சா: அப்படி இல்லை.

சத்; இன்பம், செல்வம் என்ற தமிழ் வாலிபர்களைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறீரா?

சா: பத்திரிகைகளில் படித்திருக்கிறேன்.

சத்: 79 ஜூலை மாதப்பகுதியில் அந்த இளைஞர்கள் கொலை செய்யப்பட்டு அவர்களது சடலங்கள் சிதைக்கப்பட்டநிலையில், வீசப்பட்டிருந்ததுபற்றி தெரியுமா?

சா: பத்திரிகைகளில் படித்தேன்.

சத்: பலாலிஇராணுவ முகாமில் 6 வது எதிரி கைதியாக இருந்தபோது இதுபற்றி அவரிடம் கூறினீரா?

[7-ம் பக்கம் பார்க்க]

# "நாட்டுக்காக உயிரைத் துறக்கவும் தயார்!"

## நீதிமன்றத்துல் காப்டன் மாயாதுன்னை

[கொழும்பு]

நீர்வேலி கொலை, கொள்ளை வழக்கில் இராணுவ லெப்டினன்ட் உபாலி மாயாதுன்னை சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

"சுன்னாகம் முருகையா வீட்டிலிருந்து தப்பிஓடியபோது நான் துரத்திப் பிடித்த நடேசுதாசனை நானும் சப் இன்ஸ்பெக்டர் உடுகம்பலவும் ஜீப்வண்டிக்குக் கொண்டுவந்து ஜீப்பில் ஏறுமாறு கூறிய போதும் அவர் தப்பி ஓட முயன்றார்.

அங்கிருந்து பலாலி இராணுவ முகாமுக்கு கொண்டு போனோம். பலாலி முகாமில் ஜீப் வண்டியிலிருந்து இறங்கும்போதும் கைதுசெய்த போது இருந்த நிலையிலேயே இருந்தார்.

எனக்குத் தெரிந்தவரையில் ஏ. எஸ். பி. குணசிங்காவிடம் சந்தேகநபர் ஒப்படைக்கப்பட்டார்.

ஜீப்பில் அவரை முகாமுக்கு கொண்டுபோனபோது அவருக்கு எதுவித இன்னல்களும் விளைவிக்கப்படவில்லை. அவர் ஜீப்பிலிருந்து இறங்கிய போது அவரது முழங்கைப் பக்கம் இரத்தக்காயம் இருப்பதைக் கண்டேன். அவரை நான் வேலிகளுக்கு மேலால் துரத்திச் சென்றபோது அக் காயம் ஏற்பட்டிருக்கலாம்.

சந்தியேந்திரா குறுக்கு விசாரணை செய்தார்.

சத்: நீர் எப்போது காப்டனாகத் தரமுயர்த்தப்பட்டீர்?

சா: 1981 அக்டோபர் 6-ம் திகதி.

சத்: தாய்நாட்டுக்காக நீர் உயிரையும் கொடுக்கத் தயாராக இருக்கிறீர்? அப்படித்தானே.

சா: நாட்டுக்கு சேவை செய்வதாகவே நான் சத்தியம் செய்துகொடுத்துள்ளேன்.

சத்: அவ்வாறான சேவையில் உமது உயிரைத் தியாகம் செய்யவும் தயாராக உள்ளீர்?

சா: நான் ஒரு தொழில் படைவீரன். தொழிலுக்காகவே இராணுவத்தில் சேர்ந்துள்ளேன்.

சத்: தொழில் இராணுவ வீரன் என்ற ரீதியில் நாட்டுக்காக உயிரைத் தியாகம்செய்யத் தயாராக இருக்கிறீர்?

சா: அவசியம் ஏற்பட்டால் நாட்டுக்காக உயிரைத் துறக்கவும் தயார்.

உங்கள் சுபீட்சத்திற்கு வழிகாட்டி

ஷப்ரு ★ நம்பிக்கை ★ நாணயம் ★ அனுபவம்

நிதி உதவிகள்

* வர்த்தக, விவசாய உபகரண வாடகை கொள்வனவு உதவி
* விவசாயம், கைத்தொழில், இறக்குமதி வியாபாரம், நிதி ஏற்பாடு
* நீங்கள் விற்கவிருக்கும் காணி, வீடுவளவு சிரமமின்றி நல்ல விலைக்கு விற்பனை செய்து கொடுத்தல்
* ரி. வி. (கலர்) குளிர்சாதனப் பெட்டிகள், தட்டச்சு, CANON கணித்தற்பொறி, மின்விசிறி, மோட்டார் சைக்கிள் — உடன் விலைக்கும் அல்லது தவணை முறை அடிப்படையிலும் பெற்றுக் கொள்ளக்கூடிய ஒழுங்குகள்

தேவை எதுவானாலும் கலந்து ஆலோசிக்க எம்மிடம் வாருங்கள்

* ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் இரவு 9-15 மணிக்கு இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபன வர்த்தக சேவையில் எமது "துப்பறியும் கானேகள்" நாடகத்தை கேட்க தவறாதீர்கள்.

SHABRA UNICO FINANCE LIMITED

(இலங்கை மத்திய வங்கியில் அனுமதி பெற்ற ஸ்தாபனம்)

தலைமை அலுவலகம்
61, நியூ புலர்ஸ் வீதி,
கொழும்பு - 4.

யாழ்ப்பாணம்
207, மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

## யாருடையது

ஒரு சோடி காப்பு, ஒரு தொகைப் பணத்துடன் லேடிஸ் சிறிய பேர்ஸ் ஒன்று யாழ் வேம்படி வீதியில் கண்டு எடுத்து ஈழநாடு காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் தகுந்த அத்தாட்சி காட்டி காரியாலய நேரத்தில் பெற்றுகொள்ளலாம்.

வெலிங்டன்? வெல்லி (மானிப்பாய்)
தினசரி– 6–15, 9–15
சனி.ஞாயிறு 2–30
4–2–83 வரை
இதயக்கனி

ஹரன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
சுதாகர் - ராதிகா
கிழக்கே போகும் ரயில் (கலர்)

றீகல் (யாழ். நகர்)
கடைசி சில தினங்கள்
எங்க வீட்டுப் பிள்ளை

சாந்தி யாழ்.
தினசரி 5 காட்சிகள்
Robert Shaw-Lee Marvin
AVALANCHE EXPRESS
Action-Thriller-Colorscope

## உழைப்பால் உயர்ந்தவர்

உண்மையான உழைப்பு உயர்ச்சியைத் தரும் என்ற கூற்றுக்கு உதாரணபுருஷராகத் திகழ்ந்தவர் அமரர் கலாநிதி கந்தையா சுந்தரலிங்கம். நாவலப்பிட்டிப் புகையிரதநிலைய உதவி அதிபராகக் கடமையில் ஈடுபட்டு போக்குவரத்துப் பொருளியலில் இலங்கையில் முதன் முதல் கலாநிதிப்பட்டம்பெற்றவர் அவர் என்பது குறிப்பிடத்தக்கது.

கலாநிதி க. சுந்தரலிங்கம் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, பலாலி கனிஷ்ட பல்கலைக்கழகம் ஆகியவற்றில் கடமையாற்றியதுடன், இலங்கைப் போக்குவரத்து மத்தியசபை இயக்குநராகவும், நிபுணத்துவ ஆலோசகராகவும் பணியாற்றியுள்ளார். அத்துடன் மார்க்கா நிறுவனம், இன்–போ–மக்ஸ் நிறுவனம் ஆகியவற்றிலும் இயக்குநராக இருந்து சிறப்புற பணிபுரிந்தவர். நாடு போற்றும் நல்லறிஞர் கலாநிதி சுந்தரலிங்கத்தின் மறைவு வர்த்தகவிளானுக்கும், இந்நாட்டுக்கும் ஈடுசெய்யமுடியாத பேரிழப்பாகும். தாம் பணியாற்றிய துறைகளுக்கு பெருமையும் புகழும் தேடிக் கொடுத்தவர்.

— ஓர் அன்பர்.

## நியமனம்



(நீர்வேலி)

வலி கிழக்கு தென்பகுதி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பொதுமுகாமையாளர் திரு ந குமரேசபசுபதி பிராந்திய கூட்டுறவுத் தொழில்முறைக் கல்விப் போதனாநிலைய அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார்.

வலிகிழக்கு ஐக்கிய பண்டகசாலை சமாசங்களின் நிர்வாகக்காரியதரிசியாக 1962ம் ஆண்டு பதவி ஏற்ற இவர் 71–ல் வலி கிழக்குத் தென்பகுதி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பொதுமுகாமையாளராகப் பதவி ஏற்றார். 1983 பெப்ரவரிவரை தொடர்ந்து இருபத்தொரு ஆண்டுகள் ஒரே சங்கத்தில் முகாமைத்துவப் பதவிவகித்தவர் இவரே என்பது குறிப்பிடத்தக்கது.

1975–ல் ஜப்பானுக்கும், 1978ல் இந்தியாவிற்கும் புலமைப்பரிசில் பெற்றுச்சென்று, விசேட பயிற்சிபெற்ற இவர்: சுவிற்சர்லாந்து சர்வதேச அபிவிருத்தி அதிகார சபையின் உதவியுடன் இலங்கைக் கூட்டுறவு இலாகாசுவும் தேசிய கூட்டுறவுச் சபையும் இணைந்து நடத்தும் பிராந்திய கூட்டுறவு தொழில்முறைக் கல்வி போதனாநிலைய அதிபராகப் பதவி ஏற்கும் திரு. குமரேசபசுபதி இடைக்காடு நடராசா ஆசிரியர் தம்பதிகளின் புத்திரனும், இடைக்காடு மகாவித்தியாலயம், திருநெல்வேலி பரமேஸ்வராக் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவரும், புனா சர்வகலாசாலையின் விஞ்ஞானப்பட்டதாரியுமாவார்.

## கூட்டுச்சேரா

(3–ம் பக்கத் தொடர்ச்சி)

இனவாதம், ஸியோனிஸம் நிறவெறி மற்றும் அந்நிய நிர்ப்பந்தங்களின் சகல வடிவங்கள் அனைத்துக்கும் எதிரான போராட்டம் பற்றியும் தன்னாதிக்கத்தைக் கௌரவிப்பது, பிரதேச ஒருமைப்பாடு, வன்முறை பயன்படுத்தாதிருப்பது ஆகியவற்றை கூட்டுச்சேரா இயக்கத்தின் சாராம்சமாகக் கடைப்பிடிப்பதையும் இக்கூட்டத்தின் முடிவில் வெளியான கூட்டறிக்கை வலியுறுத்தியுள்ளது.

நிக்கரகுவாவில் நடைபெற்ற இக் கூட்டத்தின் அறிக்கைகள் மார்ச்சில் புதுடில்லியில் நடைபெறவிருக்கும் இந்த இயக்கத்தின் 7வது உச்சிமகாநாட்டுக்கும் பெரும் அனுசரணையாக உள்ளது என்றும் கூறப்படுகிறது.

## நடேசுதாசனின்..

(6–ம் பக்கத் தொடர்ச்சி)

சா. இல்லை.

சத்; அவர்காவலில் இருந்த போது அவரது சேமநலம் பற்றி நீங்கள் அக்கறைகொண்டிருந்தீரா?

சா: ஆம்.

சத்: தாங்கள் தங்களை இரக்கமுள்ள மேஜர் எனக்கருதுகிறீரா?

சா: என்னைப்பற்றிக் கூற விரும்பவில்லை.

சத்: இந்த சாட்சிக் கூண்டில் உதவிப்பொலிஸ் அதிபர் ஜ்ரம்பதி அளித்த சாட்சியத்தை பத்திரிகைகளில் படித்திருக்கிறீரா?

சா: எனக்கு அந்தச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை.

விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது.

ஸ்ரீதர் (யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர்.
நம் நாடு

மனோகரா
(யாழ்நகர்) தினசரி 10–30. 2–15, 4–45, 7–00 9–30p.m.
KIRK DOUGLAS in
THE FURY
Color, Adults only

வின்ஸர் தினசரி 4 காட்சிகள் (யாழ்நகர்)
✶ சிவாஜி ✶ வாணிஸ்ரீ ✶ பாலாஜி ✶ நாகேஷ்
"வசந்தமாளிகை"
[கலர்]
(இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட புதிய பிரதி)

வெலிங்டன்
(யாழ். நகர்)
இன்றுமட்டும்
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி—மஞ்சுளா
உத்தமன்
(கலர்)
3–2–83 முதல்
NORMAN RAE

லிடோ (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
கமல்–ஸ்ரீதேவி
பதினாறு வயதினிலே

ராணி (யாழ். நகர்)
தினசரி 10-00, 2-00, 6-00, 9-30
ஆந்திரா முதலமைச்சர்
என். டி. ராமராவ், ஜெமினி சாவித்திரி நடித்த
மாயா பஜார்

ராஜா (யாழ்- நகர்)
தினசரி 10-00, 2-00, 6-00, 9-30
சிவாஜி - சாவித்திரி - தேவிகா-
முத்துராமன் - என். டி. ராமராவ்
கர்ணன்
(ஈஸ்ட்மன் கலர்)
இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட புத்தம்புதிய பிரதி

## அமெரிக்க பட்ஜெட்:
## பாதுகாப்புச் செலவிற்கு கூடுதல் தொகை!

வாஷிங்டன் பெப். 1 அமெரிக்க ஜனாதிபதி றீகன் 84, 860கோடி டாலர் செலவுகளுக்கான 1983ம் ஆண்டுக்கான பட்ஜெட்டை பாராளுமன்றத்திடம் சமர்ப்பித்துள்ளார்.

இந்த பட்ஜெட்டில் பாதுகாப்புச் செலவினங்களுக்கே கூடுதல் தொகை ஒதுக்கப்பட்டுள்ளது. பாதுகாப்பு செலவுகளுக்காக 23, 860கோடி டாலர் ஒதுக்கப்பட்டுள்ளது.

சர்ச்சைக்குரிய 'எம்எக்ஸ்' ரகஏவுகணைத்திட்டத்திற்கென 660 கோடி டாலர் ஒதுக்கப்பட்டுள்ளது. வளர்முகநாடுகளின் உதவிக்கென 443கோடி டாலர் ஒதுக்கப்பட்டுள்ளது. (வெ)

## செல்வந்த நாடுகள்
## மூன்றும் உலக நாடுகளுக்கு உதவியளிக்க வேண்டும்
### 25 நாடுகள் கோரிக்கை

லண்டன், பெ. 1 செல்வந்தநாடுகள் மூன்றும் உலக நாடுகளுக்கு கடன்பளுவைச் சமாளிப்பதற்கு உதவியளிக்கவேண்டுமென்று சுவிற்சிலாந்தில் கூடிய 25 நாடுகளின் அமைச்சர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கைத்தொழில் நாடுகளுக்கும் மூன்றும் உலகநாடுகளுக்குமிடையே நெருங்கிய ஒத்துழைப்பு இருக்கவேண்டுமென்றும் அவர்கள் தெரிவித்தனர்.

உலகை எதிர்நோக்கும் பொருளாதாரப் பிரச்னைகள் பற்றி ஆராய்ந்த அமைச்சர்கள், வேலையில்லாப் பிரச்னையைத் தீர்க்கவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்று உலகநாடுகளைக் கேட்டுள்ளனர். (வெ)

## வள்ளுவர் அறிவகம் பூட்டு;
### யாழ். அரச அதிபருக்கு முறையீடு

[மாவிட்டபுரம்]

மயிலிட்டி வள்ளுவர் அறிவகம் அதன் நிர்வாகிகளால் பூட்டப்பட்டு, அது குறித்து யாழ். அரச அதிபருக்கும், யாழ். மாவட்ட சபைத் தலைவருக்கும் தந்திமூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி அறிவகத்தில் இரவிலும், பகலிலும் ஏராளமான வாசகர்கள் வந்து புதினப் பத்திரிகைகளையும், ஏனைய சஞ்சிகைகளையும் வாசித்து வந்தனர்.

இப்பகுதி மக்களுக்குப் பெரிதும் உதவியாகவிருந்த இந்த அறிவகத்திற்கருகில் மிளகாய் அரைக்கும் ஆலை ஒன்று அண்மைக் காலமாக இயங்கிவருவதால் இங்கு வரும் வாசகர்கள் பத்திரிகைகளையோ, சஞ்சிகைகளையோ வாசிக்க முடியாமல் அசௌகரியம் ஏற்பட்டிருந்ததாக கூறப்படுகிறது.

இது பற்றி அறிவக நிர்வாகிகள் மாவட்ட அபிவிருத்திச் சபை காங்கேசன்துறை உப அலுவலக அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தருக்கும், வலி வடக்கு உதவி அரசாங்க அதிபருக்கும், யாழ். அரசாங்க அதிபருக்கும், யாழ் உள்ளூராட்சி ஆணையாளருக்கும், காங்கேசன்துறை எம்பிக்கும், காங்கேசன்துறை சுகாதார வைத்திய அதிகாரிக்கும் முறையீடு செய்திருந்தும் எவ்வித தீர்வும் ஏற்படாமையால் அறிவகத்தை தற்போது மூடியுள்ளனர்.

இதுபற்றி யாழ். அரசாங்க அதிபருக்கும், யாழ் அபிவிருத்திச்சபைத் தலைவருக்கும் அவர்கள் தந்திமூலம் அறிவித்துள்ளனர்.

இவ்விவகாரத்தை சுமுகமாக தீர்த்து வைத்து வாசகர்களுக்கு உதவுமாறு சம்பந்தப்பட்டவர்களிடம் கோரப்பட்டுள்ளது.

## நாவல் போட்டி முடிவுகள்

(கொழும்பு)

1981–ம் ஆண்டில் ஈழத்து நாவலாசிரியர்களால் வெளியிடப்பட்ட நாவல்களில் மிகச் சிறந்த நாவலாக ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம் எழுதிய ''ஒரு கோடை விடுமுறை'' என்ற நாவல் தகவத்தால் தெரிவு செய்யப்பட்டுள்ளது. இரண்டாவது சிறந்த நாவலாக தெணியான் எழுதிய ''கழுகுகள்'' என்ற நாவலும் மூன்றாவதாக சுதாராஜ் எழுதிய 'இளமைக் கோலங்கள்' என்ற நாவலும் தெரிவு செய்யப்பட்டுள்ளன. முதலாவது சிறந்த நாவலுக்கு ரூபா500 ம் இரண்டாவதற்கு ரூபா 300–ம் மூன்றாவதற்கு ரூபா 200–ம் பரிசாக வழங்கப்படும்.

## கிரிக்கெட்
## வெற்றி தோல்வி இல்லை

(அரியாலை)

யாழ். பல்கலைக்கழகக் கிரிக்கட் கோஷ்டிக்கும், யாழ். பரியோவான் கல்லூரிக்குமிடையே பரி. யோவான் கல்லூரி மைதானத்திலே நடைபெற்ற கிரிக்கட் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

முதலாவது முறையாகத் துடுப்பெடுத்தாடிய யாழ். பல்கலைக்கழகக் கோஷ்டி எல்லா விக்கட்டுகளையும் இழந்து 237 ஓட்டங்களைப் பெற்றது.

அதனைத் தொடர்ந்து விளையாடிய யாழ் பரியோவான் கல்லூரிக்கோஷ்டி எல்லா விக்கட்டுகளையும் இழந்து 211 ஓட்டங்களைப் பெற்றது நேரம் முடிவடைந்ததால் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

## புதியநிர்வாகிகள்

[மாவிட்டபுரம்]

மாங்கொல்லை இளைஞர் முன்னேற்றமன்ற சனசமூக நிலைய வருடாந்த பொதுக் கூட்டம் நிலைய மண்டபத்தில் இடம் பெற்ற சமயம் பின்வருவோர் புதிய நிர்வாகிகளாகத் தெரிவாகினர்.

தலைவர் திரு சி. தாமோதரம்பிள்ளை உப தலைவர்கள் திரு எஸ். ஆர். ஞானசுந்தரம் திரு அ. மரியாம்பிள்ளை செயலாளர் திரு ச.ம. தவராசா உப செயலாளர் திரு அ, கிருஷ்ணகுமார் பொருளாளர் திரு பா. குணசேகரம் விளையாட்டுத் துறை தலைவர்கள் திரு ம, சிவலிங்கம் திரு ரி, மரியதாஸ் நாடகத்துறைத் தலைவர் திரு ந. நாகராஜா கணக்கு பரிசோதகர் திரு நா நடராஜா.

[ஈ]

## இலவச பாடநூல் திட்டம்:
# "ஏழைப் பெற்ருேருக்கு பெரும் வரப்பிரசாதம்"

-யாழ். இந்து அதிபர்

[யாழ்ப்பாணம்]

"இன்றைய அரசின் இலவச பாடப்புத்தகத் திட்டம் ஏழைப் பெற்ருேருக்கும் மாணவர்களுக்கும் பெரியதொரு வரப்பிரசாதமாகும். பாடப் புத்தகங்கள் இலவசமாக விநியோகிக்கப்படுவதன் மூலமே இலவசக் கல்வித்திட்டம் பூரணத்துவம் பெற்றுள்ளது.

இவ்வாறு யாழ். இந்துக் கல்லூரி அதிபர் திரு. பி. எஸ். குமாரசுவாமி மாணவர்கள் மத்தியில் பேசுகையில் கூறினர். அரசின் இலவசப்பாடப் புத்தக விநியோக மூன்ருவது ஆண்டு விழா யாழ். இந்துக் கல்லூரியில் கொண்டாடப்பட்டது. இவ்வைபவத்தில் அதிபர் திரு. குமாரசுவாமி பேசினர்.

இவர் தொடர்ந்து பேசுகையில், சிங்கள மன்னர் காலத்திலும் தமிழ் மன்னர் காலத்திலும் ஆரவாரமின்றிக் கல்விப் பணி நடைபெற்றதென்றும் அந்தக்கலை இன்றைய அரசின் காலத்திலும் ஏற்பட்டுள்ளதென்றும், மகிழ்ச்சியுடனும், நன்றிப்பெருக்குடனும் இதனை நாம் வரவேற்றுப் பயன்பெற வேண்டுமென்றும் கூறினர்.

ஆசிரியர் திரு. க. சிவராமலிங்கம் பேசுகையில் கூறியதாவது:-

"எந்தவொரு நாடும் நினைக்கவே துணியாத இலவசக் கல்வித்திட்டத்தை வெற்றியுடன் செயலாற்றிவரும் இலங்கை அரசு மேலும் பல கோடி ரூபா செலவில் இலவசப்பாடப்புத்தகங்களை வழங்க முன்வந்தமை அகில உலகக் கல்வி வரலாற்றில் இதுவரை காணமுடியாத அதிசயம். ஒரு நாட்டின் கல்விவளமே இறைவனலும் அழிக்கப்படாத பெருவளம். இதைப் பேணிக்காத்தலெமது தலையாய கடன்.

[அ]

## பத்து இளைஞர்....

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

என்ற சந்தேகத்தின்பேரில், பத்து இளைஞர்கள்கொண்ட கோஷ்டியினர் திறந்த கார் ஒன்றில் ஞாயிற்றுக்கிழமை இரவு பத்து மணியளவில் சென்றுகொண்டிருந்த போது, பருத்தித்துறைப் பொலிசார் காரைத் தடுத்துநிறுத்தி இவர்களைக் கைதுசெய்தனர்.

உதயகுமார், மௌனகுரு, சந்திரன், சதாசிவம், கணேஷ், லிங்கம், ராஜன், குமார், விஜயன், மோகன் ஆகிய பத்து இளைஞர்களும் பொலிசாரினல் கைதுசெய்யப்பட்டு, பருத்தித்துறை நீதிபதி திரு. வி. பி. சுந்தரலிங்கம் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டபோது றிமாண்டில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

சந்தேகநபர்கள் சார்பில் சட்டத்தரணி என். கிருஷ்ணராசா ஆஜராகி நேற்று பிணை மனுவொன்றை தாக்கல் செய்திருந்தார். பொலிசார், தாங்கள் நடத்திய விசாரணைகளில் சந்தேகநபர்கள் பயங்கரவாத நடவடிக்கைகளுடன் சம்பந்தப்படவில்லையென்று நீதிபதியின் கவனத்திற்குக் கொண்டு வந்ததைத் தொடர்ந்து பத்துப் பேரும் விடுதலை செய்யப்பட்டனர். பொலிஸ் நிலையத்திலிருக்கும் காரை சொந்தக்காரர் உரிமை கோரும் பட்சத்தில் காரை ஒப்படைக்குமாறும் பொலிசாருக்கு நீதிபதி உத்தரவிட்டார்.

## பல்கலைக்கழக...

[1-ம் பக்கத் தொடர்ச்சி)

தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருப்போருக்கு நிவாரணம் கிடைக்கும்வரை தொடர்ந்து உண்ணுவிரதம் இருப்பதெனவும், நான்கு நாட்களுக்கொருமுறை 50 மாணவர்கள் வீதம் இந்த உண்ணுவிரதப் போராட்டத்தில் ஈடுபடுவர் என்றும் இக்கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

நேற்றுக் காலை 25 மாணவர்களும் 25 மாணவிகளும் உண்ணுவிரதம் அனுஷ்டித்தனர். இவர்களுக்கு உதவியாக மற்றும் மாணவ - மாணவிகளும் குழுமியிருந்தனர்.

உண்ணுவிரதம் இருந்த மாணவிகளின் பக்கத்தில், வேறும் இரு இளம் பெண்கள் இருக்கக் காணப்பட்டனர் இவர்களிருவரும் தடுப்புக்காவலில் இருக்கும் பல்கலைக்கழக மாணவர் ராஜாஜியின் சகோதரிகள் எனத் தெரிவிக்கப்பட்டது.

கொட்டும்பனியையும், குளிரையும் பொருட்படுத்தாமல் மாணவ-மாணவிகள் நேற்றிரவுபிரார்த்தனையுடன் இருந்தனர்.

உண்ணுவிரதம் நடைபெறும் இடத்தைச்சுற்றி கயிறுகளால் தடுப்பு வேலிபோடப்பட்டிருந்தது. இந்தத் தடுப்பு வேலியில் பல்கலைக்கழக வாசலை நோக்கித் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருக்கும் மாணவர் ஒருவர் சிறைக் கம்பிகளினூடாக ஏக்கத்துடன் யாரையோ எதிர்பார்த்திருக்கும் வரைபடம் ஒன்று வைக்கப்பட்டிருக்கிறது.

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் மேற்கொண்டிருக்கும் உண்ணுவிரதப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவிக்குமுகமாக, யாழ்ப்பாணத்திலுள்ள சில கல்லூரி மாணவர்கள் கறுப்புப்பட்டி அணிந்து கல்லூரிகளுக்குச் சென்றதை நேற்று அவதானிக்கக்கூடியதாக இருந்தது. (மா)

## தாய்நாட்டிலிரு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வாளிகளையும் திரும்பவும். இந்த ஒப்பந்தம் [illegible] வழிவகுக்கும் என்றும் கூறப்படுகிறது.

கொழும்பில் நடைபெறும் இம்மகாநாட்டில் 51பொதுநல அமைப்பு நாடுகள் கலந்து கொள்ளும்.

## நீர்வேலி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

எழுதுகிறார்கள் என்பதைப் பற்றி பல தடவைகளிலும் பிரதி சொலிசிட்டர் ஜெனரல் அக்கறை காட்டியுள்ளார். இது அவரது தனிப்பட்ட அக்கறையல்ல. பத்திரிகைகளில் என்ன வெளிவருகிறது என்பதில் அரசு அக்கறைகொண்டுள்ளது என்பதையே இது காட்டுகிறது. பிரதி சொலிசிட்டரின் கவனமும் அக்கறையும் அரசின் கவனத்தையும் அக்கறையையுமே காட்டுகிறது என்று பத்திரிகை நிருபர்கள் கருதியிருப்பார்கள். இவர் அக்கறை எடுத்துக் கொள்வதனுல்தான் போலும் நாட்டின் முக்கிய ஆங்கில நாளேடுகளில் இந்த விசாரணைபற்றி ஒரு வசனம் கூட கடந்த காலங்களில் பிரசுரமாகவில்லை. பத்திரிகைகள் பிரசுரித்தால் என்ன பிரசுரிக்காவிட்டால் என்ன பனுகொடை-பலாலி இராணுவ முகாம்களில் இந்த எதிரிகளுக்குஇழைக்கப்பட்ட கொடுமைகளை எடுத்துச் சொல்லி உண்மையை நிலைநாட்டுவது எனது கடமை. அந்தஉண்மை நிலைநாட்டப்படும் என்பதில் எனக்கு சந்தேகமில்லை. எதிரி தரப்பின் நோக்கம் இந்த வழக்கின் விசாரணை விபரங்களை தெளிவாகவும் திட்டமாகவும் பதிவேடுகளில் பதிய வைப்பதே.

பிரதி சொலிசிட்டர் ஜெனரல் திரு. சுனில் டி சில்வா பதிலளிக்கையில் கூறியதாவது:

பத்திரிகைகளில் வெளிவருபவை பற்றி நான் மிகவும் அக்கறை கொள்கின்றேன். நாம் வழக்கைத் தாக்கல் செய்துள்ளோம். விசாரணை விபரங்களைப் பத்திரிகைகள் முழுமையாகப் பிரசுரிக்க வேண்டும். அல்லது ஓரளவாகப் பிரசுரிக்க வேண்டும். ஆனல் பாரபட்சம் காட்டப்படுகிறது. எதிரிகளின் சாட்சியங்களை மறுத்து இராணுவத்தினர் அளித்துள்ள வாக்குமூலங்கள் வெளிவரவில்லை. நீதியைநிலைநாட்ட, மக்களுக்கு உண்மையை விளங்கவைக்க வேண்டும். நியாயம் எவ்வாறுவழங்கப்படுகிறது என்பதை மக்கள் அறியவேண்டும். விசாரணைகளை எவரும் பார்க்கலாம். இரகசியமாக ஒன்றும் நடத்தப்படவில்லை. [இ]

## இளைஞர் கடலுக்குப் பலி

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறைக் கடலில் புதிய துறைமுகப் பகுதியில் பொழுது போக்குக்காக நீந்திய இரு வாலிபர்களில் ஒருவர் கடலில் மூழ்கி இறந்தார்; இவரது சடலம் பலத்த தேடுதலின்பின்னர் எடுக்கப்பட்டது. மற்றவர் ஒருவாறு நீந்திக்கரை சேர்ந்தார்.

என். ஜெகன்மோகன் என்பவரே கடலில் மூழ்கி இறந்தவராவார்.

## இன்று

(கோப்பாய்)

கோப்பாய் கல்விவள நிலையம் வழங்கும் கல்வி ஊக்குவிப்புத் திட்டத்தின் கீழ் ஓர் அம்சமாக கோப்பாய் வட்டாரத்தில் வசதி குறைந்த ஆயிரம் மாணவர்களுக்கு இன்று இலவச அப்பியாசப் புத்தகங்கள் விநியோகிக்கப்படும்.

கோப்பாய் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. ஆ. வ. தங்கராசா தலைமையில், அச்சுவேலி புனித தெரேசா மகளிர் வித்தியாலயத்தில் இன்று பிற்பகல் நடைபெறும் இவ்விழாவில், வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் திரு. எம். சிமியாம்பிள்ளை பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். சிறப்பு விருந்தினர்களாகப் பன்னிருவர் கலந்துகொள்வார்கள்.

## கொப்பிகள் அன்பளிப்பு

[யாழ்ப்பாணம்]

கோப்பாய் வட்டாரத்தில் வசதிகுறைந்த மாணவர்களுக்கு சிவநெறிப்புரவலர் திரு. க. கனகராசா ஆயிரம் கொப்பிகளையும், தொழிலதிபர் திரு. சி. நாகரத்தினம் ஐந்நூறு கொப்பிகளையும் அன்பளிப்புச்செய்துள்ளனர்.

## விசாரணை

[யாழ்ப்பாணம்]

தமிழீழ விடுதலை அணியின் நிர்வாகச் செயலாளர் திரு. ஈழவேந்தன் நேற்றுப் பொலிசாரினல் அழைத்துச் செல்லப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்.

யாழ். உதவிப் பொலிஸ் அதிபர் திரு. மனேகரன் பெப்ரவரி 3ம், 4ம் திகதிகளில் நடைபெறவிருக்கும் ஹர்த்தால், பாடசாலை பகிஷ்கரிப்பு, கடையடைப்பு, தேசிய துக்க தினம் சம்பந்தமாக திரு. ஈழவேந்தனிடம் விசாரணைசெய்ததாகத் தெரிகிறது.

சாத்வீகமான முறையிலே இவற்றை அனுஷ்டிக்கப்போவதாக திரு. ஈழவேந்தன் பதிலளித்ததாக அறியப்படுகிறது. [மா]




எஸ். சின்னத்துரை & பிறதர்

39, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம். போன்: 22703 22183



VACANCY FOR BOOK KEEPERS

Experienced person in bookkeeping & Import Trade for a large Trading organization in Jaffna. Apply with full bio data on or before 10th February 1983. salary negotiable.

MANAGEMENT INFORMATION SERVICE.
68, KANNATHIDDY ROAD,
JAFFNA,
PHONE: 22519 6058



ஆர்ப்பிக்கோ

உற்பத்திப் பொருட்களுக்கு

10% வீத தள்ளுபடி!!

✶ மெத்தைகள் ✶ உருக்குக் கதிரைகள் ✶ "குஷன்" செற்றிகள்
✶ மகாராஜா செற்றிகள் ✶ காரியாலய தளபாடங்கள்

கண்கவர் தளபாடங்களுக்கு முந்துங்கள்!

யாழ். மாநகர எல்லைக்குள் இலவச விநியோகம் செய்துதரப்படும்.

டில்கா பேணிச்சர் பலெஸ்

234 - 236, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். போன்: 24186.


## மரண அறிவித்தல்
### மனேகரன் குகானந்தன் (தம்பி)

இலங்கை வங்கி யாழ்ப்பாணக் கிளை ஊழியர் மனேகரன் குகானந்தன் தம்பி) காலமானர். அன்னர் தங்கவடிவேலு தம்பதிகளின் அன்பு மகனும், ஜெயநாயகி, சற்குணன், நிர்மலம், உருத்திரன் ஆகியோரின் அருமைச் சகோதரருமாவார். பூதவுடல் வியாழக்கிழமை [3-2-83] பிற்பகல் 4 மணியளவில் 4-ம் குறுக்குத் தெருவிலுள்ள இல்லத்திலிருந்து நல்லடக்கத்துக்காக எடுத்துச்செல்லப்படும்.

6071

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் [illegible] 1983-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 2-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka, under number Q D. 100236/81 Eelanaadu - P. O. Box 49, Telegram: Eelanaadu, Telephone: 22389 — 24126]